உ

கடவுள் துணை

பீஜாக்ஷர யந்திரங்கள் அடங்கிய

சர்வதேவதாவசியம்

இஃது

ககோள சித்தாந்த கணித சாஸ்திரக்ஞராகிய

சதாவதானம்

செழுமணவை - சித்திரக்கவி

தேவேந்திரநாத பண்டிதர் அவர்களால்

ஆந்தரீகமாயுள்ள மாந்திரீகத்தை

வரையப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - FEB 1950
MADRAS

பிரசுரகர்த்தர்:

சி. கோ. முருகேச முதலியார்

புரொப்ரைட்டர்:—சி. வி. கிருஷ்ண புக் டிபோ,

சௌகார்பேட்டை போஸ்டு,

மதராஸ்.

1949

காபிரைட். இதன் விலை ரூபா 1—4—0

N50

புத்திர சந்தான எண்ணெய்

பெண்களின் கருக் குழியில் இந்திரியப் புழுக்கள் இருந்து கொண்டு இந்திரியத்தைப் புசித்து விடுவதனாலும், விபரீதப் புணர்ச்சியால் பூ விலகிப் போவதாலும், கருக்குழியில் சதை வளர்ந்து, இரத்தங் கட்டி யிருப்பதனாலும், கருக்குழி மாசு பட்டு, விளக்கமற்றிருப்பதனாலும், மதத்துக் கொழுத்திருப்பதனாலும், மூலச் சுழியில் வாய்வு, பித்தம் தங்கி யிருப்பதனாலும் அவர்கட்கு கருத்தரிக்காது. இந்த எண்ணெயைக் காலை மாலை 1 அல்லது 2 காசளவு உள்ளுக்குச் சாப்பிட்டு வர 15 நாளில் வியாதிகள் தீர்ந்து கருப்ப முண்டாகும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 2—0—0
புட்டி 3-க்கு விலை ரூபா 5—0—0

TAMIL ... LIBRARY No. 102183 MADRAS

தாது விருத்தி லேகியம்

இது ஆயுர்வேத யூனானி முறைப்படி சாஸ்திரோக்தமாய்த் தயார் செய்யப்பட்டிருக்கிறது. இதில் சரீர புஷ்டியும், வீரிய விருத்தியும் உண்டாக்கக்கூடிய அனேக விதை தினுசுகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன இந்த லேகியம் சாப்பிட்டு வந்தால் பல காரணங்களினாலும் நஷ்டமடைந்த நரம்புகளின் அசக்தியைப் போக்கி, இராஜ கருவிகளின் நரம்புகளை பலப்படுத்தி வீரிய விருத்தியைத் தரும்.

ஒரு சேர் லேகியம் டின் 1-க்கு விலை ரூபா 2—0—0
,, ,, டின் 3-க்கு விலை ரூபா 5—0—0

கிடைக்குமிடம்:—

ஷி. எஸ். ராஜன் வைத்தியசாலை,

நெ. 4, வடமலை மேஸ்திரி தெரு, முதல் சந்து,
சௌகார்பேட்டை, போஸ்டு, மதராஸ்.

நான்முகம்

இப்பாரினில் யுகாயுகமாய் பலரும் கையாடிவந்த ஓட்டாமரேஸ்வர இயந்திரமென்னும் நான்காவது வேதமாகிய அதர்வண வேதத்திற் சிதறியுள்ளவை திருவநந்தபுரமாகிய மலையாள தேசமெனவும், அதிற் சிந்தியதாயுள்ளவை சென்னைப்பட்டணமெனவும், இத்தேசங்கண் நாவலந்தீவில் தொன்றுதொட்டு யாவரும் பழமையாய் அநுபவித்துவரும் இவ்வரிய பெரிய வுரிய மாந்தரீகத்தில் புனல் சொரிதல், வேப்பிலை மந்திரித்தல், விபூதி பிடித்தல், பிசாசு விலக்கல், கழிப்பு கழிக்கல், இயந்திரங் கட்டல் முதலிய பல கிரியா சாதன மூலமாகிய மேருகாண்டம் ஐந்தாம் உபதேசத்திற் குறிப்பிட்டவாறு துஷ்டக்கிரகங்களை நிவாரணஞ் செய்வதற்கேயன்றி வேறல்ல. அன்றியும் இந் நூலிற்கு ஏற்கெனவே **சர்வ தேவதா வசியம்** எனப் பெயர் கூறிய தென்னையெனின், இதிற் சர்வ தேவதைகளையும், எல்லாத் துஷ்டக் கிரகங்களையும், பல பூதப்பிரேதப்பிசாசு பேதாள பிரமராக்ஷசமுதலியதையும் வென்று, தனக்கு ஐக்கியமாகச் செய்து அதனால் செய்யத்தகும் பல சாதனங்களில் பல தொழில்களையும் கிரமத்துடன் நடாத்துவதற்கு எளிதில் கண்டுணர ஈதோர் துணைக் கருவியா யிருக்கின்றனவாம்.

நேயர்களே! பாருங்கள். இதில் ஒவ்வொரு தேவதைகளையும் தன் கைவசப்படுத்தும்படியான மந்திரங்களுக்குரிய மாலையும், மூலமும், எந்திரபீஜாக்ஷரங்களையும் ஏற்கெனவே சாங்கோபாங்கமாய் யாவருங் காண எடுத்துரைத்ததில் அது யாவர்க்குங் கைவல்யமாய் உபயோகப்படுமென்பது திருஷ்டம். அதிலும் பாருங்கள்! சிலர் ஒவ்வொரு மந்திரங்களையும் பிறர்க்கு ஒருவர் அளிக்கையில் அதற்குரிய மந்திர யந்திர பூஜாக்ஷரங்களில் தான் மெத்தவும் பழகிக் கைகண்டவன்போற் கருதி இரண்டொரு அக்ஷரங்களை மறைத்துக்கொடுப்பதினால் என்ன பலன்? அப்படி அதை வாங்கி உபயோகிப்பவன் பட்டதும் படாததுமாயிருக்க, அவனும் மற்றொருவனுக்கு அவ்வாறளிக்க, அதுவுந்தானென்ன பலனை யளிக்கும்? ஈதிப்படியிருக்க, ஓர் மாந்த்ரீகன் மகா மந்திர குருமூர்த்தி நானென்பதாய் சிதம்பரசக்கரம் அல்லது நாற்பத்து முக்கோணச் சக்கரத்தைத்தான் தரையிற் கீறி அதன்மேல் ஒரு பிசாசு பிடித்தவளை உட்காரவைக்க அவள் நாலைந்து நாள்வரையில் அப்படி இப்படி தலையை அசைக்காமலும் ஆட்டாமலும்

அரக்கி அரக்கி அபானவாய்வு பரிந்துகொண்டிருப்பதுவும் எண்ணவாகடியம். அந்த இயந்திரப் பிரயோகத்தில் உள்மூலம்-புறமூலம் ஜெபித்தும், காணியாசம், அங்காணியாசம், நியாசம், மகாநியாச மென்பதைச் செய்யும்பக்ஷத்தில் அவள் அந்த சக்கரத்தில் காலவைத்தமாத்திரத்தில் அவளைத் தூக்கி ஆகாயத்தில் எறிந்ததுபோல் எகிரித் துள்ளித் தன் கழுத்தை காகரவென்று சுழட்டித் தலைசுற்றி ஆடுவாளல்லவா? அப்படிக்கில்லாதவை பிரேத மந்திரமாகும் என்பதற்கு என்னதடை? ஆதலால் இதை முக்கியம் கையாடிப் பாராட்டுவாராக.

பீஜாக்ஷர யந்திரங்க ளடங்கிய சர்வ தேவதா வசியம் பல விஷயங்களும் பொய்யின்றி மெய்யுரைத்து அமைத்திருப்பதால், இது யாவருக்கும் வெகு நன்மையைத்தரும் என்பது உண்மை. இதில் யாதொன்றையும் கருதியவண்ணங் கேட்டாற் கிடைக்கும், பார்த்தாற்றெரியும், முயன்றால் முடியுமென்பதற் கையமொன்றில்லை யாதலால், இந்நூலைப்போல் பிறர் யாதாமொருவரும் மனம்வந்து இவ்வாறு பல விஷயங்களையும் வெளியிடத் துணியார். யானோ இதற்கு மேலுமேலும் அனந்தவிஷயங்கள் அனுபவத்தில் வழங்கிவருவதால் இவைகளை வெளியிடுவதினால் எனக்கென்ன கஷ்டம். ஆயினும் இங்கு மந்திரமுந் தந்திரமும் மருந்தும் குருவருளும் மெய்யென்றால் மெய்யாம், பொய்யென்றாற் பொய்யாம் என மதித்து அனுபவித்துக் கைக்கொண்டு வருவார்க்கு அனந்த நன்மைகளைத் தருமென்பதிற் றடையில்லை. அதிலும் சிலது அனேகருக்குத் தெரிந்துந் தெரியாமை யிருந்தாலும் இருக்கலாம். அதென்னெனின், இவையனைத்தும் ஒருவருக்கே சித்தித்திருக்கு மென்பதற் கியார்சொல்வர். ஆதலால் இதை முக்கியம் கையாடிப் பாராட்டுவாராக.

ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில், 1867-ம் வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவின் 6-வது விதியின் பிரகாரம் இந்நூலை கவர்ன்மெண்டு சட்டத்திற் கிணங்க பிறர் யாவரும் அச்சிடாதபடி (காப்பிரைட் ரிஜிஸ்டர்) செய்திருக்கின்றமையால், இந்நூலிற்குடையவர் சி. கோ. முருகேசமுதலியாராகிய நான் இதைப் பிரசுரிக்கலானேன்.

சிவமயம்

OFF... BOOKS
0 - FEB 1950
MADRAS

பீஜாக்ஷர யந்திரங்கள் அடங்கிய

சர்வ தேவதா வசியம்

(முதற்பாகம்)

காப்பு வெண்பா

ஆவதானம் போல அற்புதமாய்ச் செய்சர்வ
தேவதாவஸ்யமதைச் செப்பவே—பூவதால்
அர்ச்சிக்க வைங்க்ரனை இப்பொன் மலர்ச்சிலம்பு
கர்ச்சிக்கத் தமபதங் காப்பாம்.

சாரதாம்பாள் துதி

சாமாதி நான்கினையுஞ் சாரதாம்பாளருளால்
நாமாதியந்தமே நன்குணர—பாமாது
எத்தினமு மென்னுவி லியாவு முரைப்பதற்குப்
பக்தியுடன் பணிகுவாம்.

சர்க்குரு ஸ்துதி

மூலமுதற்காரணமாய் முன்னின்று வெப்பொருட்கும்
நூலதனிற் சாரமதை நுழைந்திட்ட—மேலறிவோன்
பற்பலவாய்ப் பரவத்தூர் பதித குருசுவாமிபதம்
அர்புதமாய் நிதம்பணிகுவாம்.

அவையடக்கம்

புல்லறிவோன் செம்பொருளைப் புண்ணியர்கள் நோக்குங்கால்
நல்லறிவோ ரெக்குற்ற நவிலாது—தொல்லுலகில்
பாவலர்க ளெஞ்ஞான்றும் நாட்டா திழுக்குகளைப்
பாவலர்கள் மன்னிப்பார் பார்.

ஆக்கியோன் பெயர்

நத்திட விஸ்வராயன் கோத்திரத்தினில்
சத்ததாய் வீராச்சாமி தவத்துதி

வந்தனெனச் செழுமணவைச் சித்திரக்கவி
சித்ததாய்த் தேவேந்திரநாதன் செய்தலே.

கணேசர் ஸ்தௌத்தியம்

உம்பர்கள் சிகாரத்ரம் உமர்மயேஸ்வரபுத்ரம்
கம்பமால் களிவஜரம் கநகாம்பர விசித்ரம்
அகண்டிதகாத்ரம் அருள்பொழி நேத்ரம்
மாதவர்பூஜிதம் வந்தேகஜாநநம்பஜே

கணநாதர் உபாசன விதி

பிராதக்காலத்தி லெழுந்திருந்து ஸ்நானபானஞ் செய்து பட்டுவஸ்திரம் அல்லது நார்மடி அரையிலுடுத்தி விபூதியணிந்து அனுஷ்டான முதலியதை முடித்து பரிசுத்தமான விடத்தில் தன்னந்தனியனாய் வீற்றிருந்து யாதொரு சித்தனுவஸ்தையு மின்றி அடியிற் கூறியவாறு தியானஞ்செய்து சக்கிரமெழுதி பூஜையில் வைத்து தூபதீபங் கொடுத்து மூலமந்திரத்தைச் செபிக்கவும்.

விக்கினேஸ்வரர் மந்திரம்

ஓம் றீம் அம் உங் சிங் கணதேவாயநம, சகல துரிதபூத வாதைகளும் நசிமசி உருவு 1008-செபிக்கவும் சித்தியாம்.

இதற்கு சக்கரம்



ஒரு வெற்றிலையில் அல்லது உள்ளங்கையில் விபூதி பரப்பி அதில் இச்சக்கரத்தை ஐங்கோணமாய்க்கீறி அதிற் பீஜாக்ஷரங்களை வரைந்து அதைச்சுற்றிலும் ஓங்காரத்தைப்போட்டு மூல மந்திரஞ் செபிக்க சகல காரியங்களுஞ் செயமாம். பலநோய்களும் அகலும்.

பூஜை விவரம்

செம்பு அல்லது மண்கலசத்தில் சுத்தமானஜலம் சுத்தியாய் மொண்டுவந்து அதில் மாவிலைக்கொத்து போட்டு கும்ப வஸ்திரங்கட்டி மஞ்சள் குங்குமம் அக்ஷதை புஷ்பஞ்சாத்தி அதன்முன் வாழையிலை போட்டு அதில் தாம்பூல பழம் தேங்காய் புஷ்பம் சந்தனம் பரமான்னம் வைத்து சூடன் சாம்பிராணி முதலிய தூப தீபங்கொடுத்து செய்யவேண்டியது.

கணபதி மூலமந்திரம்

ஓம் நமோ பகவதே ஐயும் கிலியும் சவ்வும் கணபதி வசிவசி சுவாகா வென்று உருவு 1008-செபிக்கவும் சித்தியாம்.

இதின் பலன்

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் நேர்ந்த பயம், காத்து, கருப்பு, சோகம், மந்தம் முதலியவைகளால் உண்டாகும் சுரம், பலதோஷங்கள், சிரசிலுண்டாகும் செவ்வாப்புகட்டிகள், தெறகத்தி நோய், இழுப்பு வலிப்பு, முதலியவைகளுக்கு ஷை கணேசரைப் பூசைசெய்து 108-உருவு வரையில் செபித்து கும்ப தீர்த்தம் மூன்றுதரம் கொஞ்சம் அருந்தக்கொடுத்து விபூதி பூசிக்கொண்டுவரவும் சகல வினைகளும பற்றறுந்து சௌக்கியப்படும்.

வேறு விக்கினேஸ்வரர் மந்திரம்

உதயகாலத்தி லெழுந்து நதியிற்சென்று ஸ்நானஞ் செய்து அரையில் பட்டுவஸ்திரங்கட்டி விபூதிதரித்து அநுஷ்டானஞ் செய்து சுத்தமான இடத்தில் மாம்பலகை போட்டுத் தனியாகக் கிழக்குமுகமாய் அதன்மேபரிற் குந்தி தங்கத்தகட்டிற் சக்கர மெழுதி தூபதீபங் காட்டி மூலமந்திரம் ஜெபிக்கவும்.

தியானம்

லம்போதரா ஸூகர்கர்ணோ ஹரிபிர்ம்மவிதுத்த: மகா கிரக பதிகாமி, சோமசூரியாக்னிலோசனுய் குருகில்துணைக்கு சந்ததம்.

இதற்குச் சக்கரம்



மூலமந்திரம்

ஓம்நமோ தசாக்ஷர மகாமந்திராய மூஷிகவாகனுய ஐயும் கிலியும் சௌவும் ஆ ஊ-மகாகணபதி எனக்கு வசமாக சுவாகா உருவு 1008-செபிக்க சித்தியாம்.

பூசை விவரம்

தீபமேற்றி கிழக்குமுகமாகவைத்து அதின்முன் தலைவாழையிலை போட்டு பச்சரிசி பரப்பி அதின்மேல் கும்பம் வைத்து கும்பத்தில் மஞ்சள்நூல் சுற்றிக் கும்பத்திற்குள் ஜலம் வார்த்துத் தேங்காய் பழம் தாம்பூலம் ஊதுவத்தி அவல்கடலை முதலானவைவைத்து சூடன் கொளுத்திப் பூசை செய்யவும்.

இந்த சாஸ்திரத்திற் சொல்லுகிற எத்தொழிலுக்கும் முதலில் இந்த விநாயகர் மூலமந்திரத்தை 108 தரஞ் செபஞ் செய்து பிற்பாடு மற்ற தொழில்களைச் செய்ய சித்தியாம். அப்படி செய்யாவிடின் யாவுங் கெடும் பலிதமிராது.

விநாயகர் பூஜாவிதி

சுக்லாம்-பரதரம் விஷ்ணும்-சசிவர்ணம் சதுர்ப்புஜம்
பிரஸந்நவதநம்த்யாயேத்-ஸர்வவிக்நோபசாந்தயே,

பிராணயாமம்

ஆஸநேவினியோக, ஆசனந்நம, பூம்பாதி, ஊர்த்துவ லோகஸ்ய உயர்யஸ்து திவாகர, தசப்ரணவ, ஸம்யுக்தம், த்ரிராவிர்த்தி, புந, புந, அங்குளயகரை, நாசிகாக்ரம், ஸப்பீட்டியாம், ருஷியி, பரிகல்பிதம்.

சங்கல்பம்

சுபேம்யாம், சோபனே முகூர்த்தே, ஆத்யப்ரஹ்மண, துவிதீயபரார்த்தே, ஸ்வேதவராஹகல்பே, வைவஸ்வத மநுவந்தரே, கலியுகே, ப்ரதமபாதே ஜம்புத்வீபே, பாரதவர்ஷே, பரதக்கண்டே, அஸ்மின், வர்த்தமான, வ்யவஹாரி, சாக்த்ர ஸௌரமானேன், ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணும் மத்யே (விஜய) நாம ஸம்வத்ஸரே, (தக்ஷி)ணயனே.) (வருஷ) ருதௌ, (பாத்ரபத) மாசே, (சுக்ல) பக்ஷே, (சதுர்த்தி) யாம், (சுக்கிர) வாரயுக்தாயாம், (சித்திர) நக்ஷத்திர யுக்தாயாம், சுபநக்ஷத்திர, சுபயோக, சுபகரண, ஏவங்குண, விசேஷண விசிஷ்டாயாம் சுபதிதௌ, [மம] அஸ்மாகம், ஸஹகுடும்பானும், க்ஷேமஸ்தைர்ய விஜய ஆயுராரோக்ய ஐஸ்வர்யாபி விருத்யார்த்தம், தர்மார்த்த காம்ய மோக்ஷ சதுர்வித பல புருஷார்த்த சித்யர்த்தம், இஷ்ட காம்யார்த்த சித்யார்த்தம் * வருஷே வருஷே பிரயுக்த வரசித்தி விநாயக ப்ரீத்யர்த்தம், யாவச்சக்திய தியான மாமாவாஹனுதிசமஸ்தஷோடசோபசார பூஜாஞ்சகரிஷ்யேநமஃ

( ) இக்குறிகள் அடங்கிய வருஷம், அயனம், ருது. மாசம், பக்ஷம் திதி, வாரம், நக்ஷத்திரம், ஆகிய இவைகளைப் பூசை நாட்களிற்கு ஏற்க மாற்றிக்கொள்ளவும்.

[ ] "மம என்னும் சொல்லை பிரம்மசாரியும்." "அஸ்மாகம் என்னுஞ் சொல்லை கிருகஸ்தனும்" உபயோகப்படுத்தல்வேண்டும்.

* நித்திய பூசையில் "வருஷே வருஷே பிரயுக்த வரசித்தி விநாயக மூர்த்தியஸ்ய" என்பதை நீக்கிப் பூசிக்கவும்.

கலச பூஜை

ததங்க கலச பூசாஞ்சகரிஷ்யே நமః கலசம் கந்தம் சமர்ப்பயாமி, புஷ்பம் சமர்ப்பயாமி, அக்ஷதாம் சமர்ப்பயாமி.

கங்கேசயமுனேசைவ கோதாவரி சரஸ்வதி நர்மதே சிந்து காவேரி ஜலேஸ்மின் ஸந்நிதம் குருகலசோத்கேன, பூஜாதரவ்யாணி தேவமாத்மானஞ்ச சம்புரோக்ஷிய.

மகாகணபதியேநமః த்யாயாமி, ஆவாஹயாமி, ஆஸநம் சமர்ப்பயாமி, அஸ்தயோ அர்க்யம் சமர்ப்பயாமி, பாதயோபாத்யம் சமர்ப்பயாமி, ஸ்நானம் சமர்ப்பயாமி, ஸ்நானனந்தரம் ஆசமனீயம் சமர்ப்பயாமி, யக்ஞேபவித்ரார்த்த அக்ஷதாம் சமர்ப்பயாமி, கந்தம் சமர்ப்பயாமி, அலங்கரணார்த்தம் அக்ஷதாம் சமர்ப்பயாமி, கந்தஸ்யோபரி புஷ்பாணி பூஜையாமி.

ஸ்லோகம்

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூஸ்திர
வாமன ரூப மகேஸ்வர புத்ர
விக்ந விநாயக பாத நமஸ்தே.

சோடச கர்ம நாமங்கள்

ஓம் சுமுகாய நமః	ஓம் தூமகேதுவே நமః
ஏகதந்தாய நமః	கணத்யக்ஷாய நமః
கபிலாய நமః	பாலசந்திராய நமః
கஜகர்ணிகாய நமః	கஜானநாய நமః
லம்போதராய நமః	வக்ரதுண்டாய நமః
விகடாய நமః	சூர்ப்பகர்ணய நமః
விக்நராஜாய நமః	ஹேரம்பாய நமః
கணதிபதியே நமః	ஸ்கந்தபூர்வஜாய நமః

விநாயகர் அகவல்

சீதக்களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பலஇசைபாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்
வேழமுகமும் விளங்குசிந்தூரமும்
ஐந்துகரமும் அங்குசபாசமும்
நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்
நான்றவாயும் நாலிருபுயமும்
மூன்றுகண்ணும் மும்மதச்சுவடும்
இரண்டுசெவியும் இலங்குபொன்முடியும்
திரண்டமுப்புரிநூல் திகழொளிமார்பும்
சொற்பதங்கடந்த துரியமெய்ஞ்ஞான
அற்புதநின்ற கற்பகக்களிறே
முப்பழநுகரும் மூஷிகவாகன
இப்பொழுதென்னை யாட்கொள வேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கமறுத்துத்
திருந்தியமுதலைந் தெழுத்துந்தெளிவாய்
பொருந்தவேவந்தெ னுளந்தனிற்புகுந்து
குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடிவைத்துத் திறமிதுபொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளி
கோடாயுதத்தாற் கொடுவினைகளைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டியென்செவியில்
தெவிட்டாதஞானத் தெளிவையுங்காட்டி
ஐம்புலன்றன்னை யடக்குமுபாயம்
இன்புறுகருணை இனிதெனக்கருளிக்
கருவிகளொடுக்குங் கருத்தினையறிவித்
திருவினைதன்னை யறுத்திருள்கடிந்து
தலமொருநான்குந் தந்தெனக்கருளி
மலமொருமூன்றின் மயக்கமறுத்தே

ஒன்பதுவாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக்கதவை யடைப்பதுங்காட்டி
ஆறுதாரத் தங்குசநிலையும்
பேறுநிறுத்திப் பேச்சுரையறுத்தே
இடைபிங்கலையி னெழுத்தறிவித்துக்
கடையிற்சுழிமுனைக் கபாலமுங்காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழுபாம்பின் நாவிலுணர்த்திக்
குண்டலியதனிற் கூடியவசபை
விண்டெழுமந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தனியக்கமும்
குமுதசகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டுநிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங்காட்டி
சண்முகதூலமுஞ் சதுர்முகசூட்சமும்
எண்முகமாக வினிதெனக்கருளிப்
புரியட்டகாயம் புலப்படவெனக்குத்
தெரியெட்டுநிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற்கபால வாயிற்காட்டி
இருத்திமுத்தி யினிதெனக்கருளி
என்னையறிவித் தெனக்கருள்செய்து
முன்னைவினையின் முதலைக்களைந்து
வாக்குமனமும் இல்லாமனோலயம்
தேக்கியேயென்றன் சிந்தைதெளிவித்
திருள்வெளியிரண்டுக் கொன்றிடமென்ன
அருள்தருளானந்தத் தழுத்தியென்செவியில்
எல்லையில்லா வானந்தமளித்து
அல்லல்களைந்தே யருள்வழிகாட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங்காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கங்காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளேகாட்டி

வேடமுநீறும் விளங்கநிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன்கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருடன்னை
நெஞ்சக்கரத்தி னிலையறிவித்துத்
தத்துவநிலையைத் தந்தெனையாண்ட
வித்தகவிநாயக விரைகழல்சரணே.

விநாயகர் அகவல் முற்றிற்று.

விநாயகர் கவசம்

ஆதியில் இதனடியிற் கூறப்படும் இச்சக்கரத்தைக் காசிப முனிவர் முற்கல முனிவருக்கு அருளிச்செய்ய அவர் மாண்டவ்ய முனிவருக்கு அநுக்கிரகிக்க, அவர் மரீசிமுனிவருக்கு உபதேசித்தருள, அவர் பவனமுனிவருக்குத் திருவாய்மலர்ந் தருளிச் செய்தனரென் றறிக.

இதை நித்திய கருமங்களை முடித்துப் பரிசுத்தமாகிய ஓரிடத்தில் இருந்துகொண்டு ஒன்றுபட்ட மனத்துடனே விநாயகரைத் தியானித்து இதைச் செபிக்கவேண்டும்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

வளர்சிகையைப்பராபரமாய்வயங்குவிநா
யகர்காக்கவாய்ந்தசென்னி
அளவுபடவதிகசவுந்தரதேகமதோற்
கடர்தாமமர்ந்து காக்க
விளவுநெற்றியையென் றும்விளங்கியகா
சிபர்காக்கப்புருவந்தம்மை
தளர்வின்மகோதரர்காக்கத்தடவிழிகள்
பாலசுந்திரனூர்காக்க. 1

கவின்வளருந்தாங்கசமுகர்காக்க
தாலங்கணக்கிரீடர்காக்க
நாவில்சிரசுமுகஞ்சிரிகைசுதர்காக்கசுவாக்
தைவிநாயகர்தான்காக்க

வவிர்நகைதுள்முகர்கார்க்கவன்னெழிற்
செஞ்செவிபாசராணிகார்க்க
தவிர்தலுறுதிளங்கொடிபோல்வளமணிசுக்
கியைச்சிந்தித்தார்த்தர்கார்க்க 2

காமருபூமுகந்தன்னைக்குணேசர் தனிகார்க்க
வுங்கணேசர்கார்க்க
வாமமுறுடிருதோளும்வயங்குங்கந்த
பூர்வசாதாமகிழ்ந்துகார்க்க
வேமமூறுகணிமுலைவிக்னவிநாய
கன்கார்க்கவிதயந்தன்னைத்
தோமகளுங்கணநாதர்கார்க்கவுதட்
டினைத்துலங்கேகம்பர்கார்க்க 3

பக்கமிரண்டையுந்தராதரர்கார்க்க
பிருட்டத்தைப்பாவநீக்கும்
விக்கினகரன்கார்க்கவிளங்கிலிங்கம்
வியானபூடணர்தாங்கார்க்க
தக்கசிங்கந்தன்னைவக்கிரதுண்டர்
கார்க்கச்சகவத்தைவல்ல
லுக்கணவன்கார்க்கவூருவைமங்
களமூர்த்திவுமந்துகார்க்க. 4

தாழ்முழந்தான் மிக்கபுத்திரர்கார்க்க
விருபதமேக தந்தார்கார்க்க
வாழ்கானசிப்பிரப்பிரக்ரதனர்கார்க்க
முன்கையைவணங்குவார்நேர்
யாழ்தரச்செய்யாசர்பூரகர்கார்க்க
விரல்பதுமமலர்த்தர்கார்க்க
கேழ்கிளருநகங்கங்கள் விநாயகர்கார்க்க
கிழக்கினில்வித்தீசர்கார்க்க. 5

அக்கினியிற்சித்தீசர்கார்க்கவுமா
புத்திரர்தென்திசையைக்கார்க்க
மிக்கநிருதியிற்கணேசர்கார்க்க
விக்கினவர்த்தனர்மேற்கென்னும்

திக்கதனிற்கார்க்கவாயுவிலிந்
திரன்கார்க்கவட திசைக்கு
தக்கநிதிபன்கார்க்கவடகிழக்கு
லீசனந்தனர்தான்கார்க்க. 6

ஏகதந்தர்மகன்முழுதுங்கார்க்கவிர
வினுஞ்சத்திபிரண்டன்மாட்டு
மோகைபின்விக்னகிருதுகார்க்கவா
ராக்கர்பூதமுறுவேதாள
மோகினிபேபிவையாதியுபிர்த்திரதால்
வுகந்துயிருபுடிவிலாத
வேகமுறுபிணிபலவும்விலக்கும்பாசாங்
குசர்தாம்விரைந்துகார்க்க. 7

மதிஞானந்தவத்தானமானமேனி
மகிழ்குலமுமவணச்சீர்முற்றுங்கார்க்க
பதிவானதனந்தானியக்கிரகமனை
விமைந்தர்பலனட்பாகிக்
கதியவுங்கலந்துசர்வாயுதர்கார்க்க
காமர்பவுத்திரர்முன்னான்
விதியாகுஞ்சுற்றமெலாமேவுநேச
வரஞ்ஞான்றம்விரும்பிக்கார்க்க. 8

வென்றிசீவிதங்கபிலர்கார்க்கசி
கியாதியெலாம்விகடர்கார்க்க
வொன்றிவரைந்துதனைமுக்காலமுமோ
திடினுமாவிடைஞரொன்று
மொன்றுமுனிவரர்களறிமீன்க
ளிலேமாரொருவரோதினாலும்
மன்றவாங்கவர்தேகம்பிணியகல
வக்கிரதேகம்வாய்க்கும்பாரே. 9

விநாயகர் கவசம் முற்றிற்று.

சுப்பிரமணியர் உபாசனமந்திரம்

ஓம்நமோ நமசிவாயம் மயில்வாகன பாலசுப்பிரமண்யா ஐயும் கிலியும் சரஹணபவ மமவசிவசி சுவாகா. உருவு 1008-செபிக்கவும் சித்தியாம்.

ஷ சக்கர மெழுதுவது

அறுகோணம்போட்டு மத்தியினில் ஓங்காரமெழுதி அதின் மூனைகளில் சரஹணபவவென்று பிரதக்ஷணமாக செப்புதகட்டி லெழுதி பூசைசெய்து ஜெபம் பண்ணவும்.

ஷ பூஜை விவரம்

காலையில் குளத்தில் முழுகி சுத்தவஸ்திரந் தரித்து விபூதி யணிந்து அநுஷ்டான முடித்து தனிபிடத்தில் மெழுகிக் கோல மிட்டு கும்பத்திற் ஜலம்வைத்து கும்பத்திற் பட்டுவஸ்திரந் சாத்தி மாவிலைபோட்டு தேங்காய்வைத்து கும்பத்தின் முன் வாழையிலையில் தாம்பூலம் தேங்காய் பழம் பாயசம் பஞ்சாமிரு தம் வைத்து தூபதீபங் கொடுத்து ஷ மூலமந்திரஞ் செபிக்க சித்தியாம். வில்வப்பலகை முக்கியம், அல்லது மாம்பலகை ஆச னத்திலிருந்து 41-நாள் ஷ உரு செபித்து முடிக்கவும்.

இதின் நன்மை

பேய்பிடித்த பெண்கள் முன்போய் நின்றவுடன் பேய் விலகிவிடும். ஷ மூலமந்திரம் 108-விபூதியில் ஷ சக்கரம் எழுதி செபித்து ஷ பெண்கள்மேற்போட ஓடிவிடும். காச்சல், பயம், சிலந்தி, பருவு முதலிய எந்த வியாதிக்கும் விபூதிபிடித்து இடவும் சவுக்கியமாம்.

மூலமந்திரம்

ஓம் பகவதிபுத்திரா - வேலாயுதா வேகமாய் வந்தென் முன் மனேஅபீஷ்டம் சாதிக்கத்தக்க சரஹணபவா ஓம் ஐயும் கிலியும் சவ்வும் ஸ்ரீம் சண்முகதேவா வசிவசி சுவாகா உருவு 1008.

ஷ சக்கரம்

ஒன்பதுவிரல் அகலம் நீளம் 9-விரல் சவுக்கத்தில் சந்தனப் பலகையில் இதைப்போல் அறுகோணங்கீறி மத்தியில் ஸ்ரீ சத்தி

யுள்ள, ஆறுவீட்டிலும் சரஹணபவாயென்று, ஆறு எழுத்தையும் அடைத்து, அறுகோணத்து நுனியில் ஸ்ரீ யென்று, ஆறுக்கும் எழுதி அறுகோணத்துக்கு வெளியில் சவுக்கமான வீடு சுற்றில் 2-வரை கீறி அதற்கு கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு 4-வாசல் விட்டு, அவைகளில் ஸ்ரீ என்று எழுதி மேற்படி சக்கரத்திற்கு வெள்ளைப் புஷ்பத்தினால் உருசெபிக்கவும்.

பூசை முன் சொல்லியிருக்கிறபடி செய்ய சித்தியாம்

இதின் நன்மை

எந்த காரியத்தை உத்தேசித்திருக்கிறார்களோ அந்தக் காரியமெல்லாம் தடையின்றி முடியும்.

பாலசுப்பிரமணியர் உபாசனம்

மந்திர சத்தி

சக்தி அஸ்த விரு ாக்ஷம், கிசிவாகனம், சடானனம், தாக புரோக்கனம், பவயெத் குக்குடததவஜம்.



சடாக்ஷர மாரல்

நாலுமறையும்புகழ்
மாலுமயனும்பணி
மேலுமரனுஞ்சொலும்
வேலுமயிலுந்துணை.

வசியம்

சரஹணபவஸ்ரீங்-சங்கரியீன்ற
சண்முகறீங் ஓங்கார
சமயகாருண்யத்தலைதனைமுருகா
தந்தியின்சுழிதிரிகோணச்
சரஹணபவனுனைச்சகலருந்துதிக்கச்
சரியையுங்கிரியையுஞானச்
சதங்கைபொற்றுளிற்கலீரெனமயின்மேற்
றுவிமாசத்திவேற்றுங்கி
சரஹணபவவிச்சமயநீவந்துன்
சவ்-ரவ்-ஹவ்-ணப்-பவ்-வவ்
சங்-கிலியும்-ஐயும்-ஓமெனவசியஞ்
சாற்றவன்பில்லிசூனியம்பேய்
சகலமுமாடத்தலைவிரித்தோடச்
சங்-றிங்-சிங்-மங்-கெனவலர
சரணமாமென்முன்னடிவந்தருள்வாய்
சண்முகாசரஹணபவனே. 1

மூல மந்திரம்

ஓம்-றீம்-ஐயும்-கிலியும்-ஔவும்-சௌவும்-சரஹணபவ.

இந்தச் சக்கரத்தை வில்வப்பலகையில் வரைந்து, எழுத்துக்களை அடைத்து, சகல ஆசனத்தில் கிழக்கு முகமாக விருந்து பூசித்து உருத்திராக்ஷத் தாழ்வடத்தால் ஆதிவாரந் தொடங்கி 1008-உருவேற்ற சித்தியாகும்.

ஆக்ருஷணம்

ரஹணபவசவென்றடிக்கத்துதிக்க
ராட்சசகணமுதலொடுங்கி
ரவிதனைக்கண்டபனியதுபோலாம்
ரங்-கெனப்பிணிபலவடங்கும்
ரஹணபவசு-வென்னநாவுக்கிரைக்கி
னற்றவப்பேருபாக்கியமாம்
லவி-லிவி-லுலு-வென்றகத்தினிற்செபிக்க
நானிலந்தொழும்-வங்-சிங்-கென்ன
ரஹணபவச-ஹங்-சிங்-வங்-கென்ன
னமனனுகானயனெழுதான்
நம்-நம்-சிவய-நம்-மெனப்பீடை
நவில்மதிகண்டாராப்போலாம்
ரஹணபவச-வெனும்பொருட்பொதிகை
நாதனுக் கோதியகுருவே
ரஞ்சிதக்குறமாதுவஞ்சிகாதலனே
ரஹணபவச நாயகனே. 2

மூல மந்திரம்

றீம்-ஐயும்-கிலியும்-ஔவும்-சௌவும்-ஓம்-ரஹணபவச.

இந்தச் சக்கரத்தை வெண்ணுமற் பலகையில் வரைந்து எழுத்துக்களை யடைத்து, பட்டு ஆசனம் ஈசானிய முகமாக விருந்து பூசித்து ஸ்படிகத் தாழ்வடத்தால், குருவாரந்தொடங்கி 1008-உருவேற்ற சித்தியாகும்.

மோகனம்

ஹணபவசரவென்றறியானயன்மால்
    அமரர்மாதவர்களுந்துதிக்க
அய்யுடன்-றீயுங்-கிலி-ஹரி-சவ்வும்
    ஐம்பதோரக்ஷரமுதலாய்
ஹணபவசரவென்-றடிக்கக்கோதும்
    அடியவர்க்கருள்செய்யும்பொருளே
ஹரி-நமசிவய-வென்றுடல்மறைந்தும்
    அங்-சிங்-வங்-கென்றிடமோகனம்
ஹணபவசர-ஆ-ஈ-ஏ-ஓ
    அம்மெனுமட்சரஞ்செபிக்க
அண்டமெண்டிசையும்சராசரபிண்டம்
    அக்கினிசோதியதாகி
ஹணபவசரவென்றுய்ந்திடச்சத்தி
    ஆதியோடுவந்தருள்புரியும்
ஆறுமாமுகவென் குறைதவிர்த்தாள்வாய்
    ஹணபவசர பிரணவனே. 3



மூல மந்திரம்

ஐயும்-கிலியும்-சௌவும்-ஓம்-றீங்-ஹணபவசர.

இந்தச் சக்கரத்தை அலரிப் பலகையில் வரைந்து எழுத்துக்களை யடைத்து புலி ஆசனத்தில், வடக்கு முகமாக விருந்து பூசித்து மிளகு தாழ்வடத்தால் சோமவாரந் தொடங்கி 1008-உருவேற்ற சித்தியாகும்.

தம்பனம்

ணபசரஹவென் றுருவோத
ஞானமுங்கல்வியுப்பெருகும்
நங்கெனமோகயோகபோகமுமாம்
நமசிவயவெனத்துதித்தால்
நாற்பத்திரண்டுகோணயந்திரமும்
நடுக்கமாம்-நங்-றீங்-இங்-றீங்
நங்-உங்-டங்-பங்-சிங்-வங்-கென்றபடி
நல்லுருப்போடதம்பனமாம்
ணபவசரஹவெனத்தொழநோய்கள்
நவிலுனற்றழும்பு சோகையும்போம்
நளிர்சுரம்வாந்திபௌத்திரமூலம்
ரத்தநோய்மூர்ச்சைபாழ்ப்பிளவை
நடுக்கமாமிடுக்கண்கிரந்தியின்மேக
நலிபெருஞ் சினைப்புவல்லிருமல்
நாடிடாதோடுங்குன் றுதோறுடும்
ணபவசரஹ நற்பொருளே. 4



மூல மந்திரம்

கிலியும்-ஔவும்-சௌவும்-ஓம்-றீம்-ஐயும்-ணபவசரஹ.

இந்தச் சக்கரத்தை ஆலம் பலகையில் வரைந்து, எழுத்துக்களை யடைத்து தற்பாசனத்தில் நிருதி திசை முகமாக விருந்து பூஜித்து தாமரைமணத் தாழ்வடத்தால் அங்காரக வாரந் தொடங்கி 1008-உருவேற்றச் சித்தியாகும்.

உச்சாடனம்

பவசரஹணநின் யரமெனுமடியர்
பவங்கெடசுகந் தருமணியே
பரா-பரி-ஐயுங்-கிலி-ஹரிசவ்வும்
பங்-நீங்-ஓ-மெனுமகார
பவசரஹவென் றனைத்தொழுத்தி
பதித்திடுஞ்சத்தியாம்வெற்றி
பரைபரிமவனை திரிபுரபவனை
பகர்நமசிவயவரம்பேறும்
பவசரஹணவென்றோதமாமயின்மேற்
பரிந்தெழுந்தபயமென்றருளி
பசிபிண் கெடவும்வுடபயமுதமை
படிற்றுரைகடையவர்நெஞ்சம்
மாசமூவாகை டங்-டிங்-கென்னவும்
படுவினைப்பூத வேதாளப்
பகைதவிர்த்தாள்வாய் பவசரஹணநின்
பாதமேகதி குருபரனே. 5



மூல மந்திரம்

ஔவும்-சௌவும்-ஓம்-றீங்-ஐயும்-கிலியும்-பவசரஹண.

இந்தச் சக்கரத்தை பலாப் பலகையில் வரைந்து, எழுத்துக்களை யடைத்து, சித்திராசனத்தில் வாய்வு முகமாக விருந்து பூசித்து சிந்தில் மாலைத் தாழ்வடத்தால் புதவாரந் தொடங்கி 1008-உருவேற்றச் சித்தியாகும்.

மாரணம்

வசரஹணப வெனச்செபித்திடவும்
வருசரஹண பவவெனவும்
வனசபூம்பதமும் மகரகுண்டலமும்
வயங்குமா மகுடமும்சிரமும்
வச்சிராக்கியுமேற் கடககங்கணமும்
மருவிழிகருணையும்வேலும்
வாணருக்குதவும் சேவலுமயிலும்
வள்ளிதெய்வானையுமுடனே
வாஞ்சையாக்கண்டு மகிழ்ந்திடக்கொடியேன்
வாழ்த்துமிச் சடாக்ஷரமாரல்
வச்சிரக்கல்லு மணிச்சிறுமாலும்
மகிழ்ந்திடும் பெட்டிமாமகனே
வரியனுக்குதவும் காக்ஷியும்வாழ்வும்
வளர்த்திடவட்ட மிட்டவர்க்கு
வலுவுறசெலவுமிக போகபாக்கியமும்
மகிழ்ந்தளித்தருள் சடாட்சரனே. 6



மூல மந்திரம்

சௌவும்-ஓம்-றீம்-ஜயும்-பிலியும்-ஓளவும்-வசரஹணப.

இந்தச் சக்கரத்தை அத்திப் பலகையில் வரைந்து, எழுத்துக்களை யடைத்து வேங்கை யாசனத்தில் அக்கினி முகமாக விருந்து பூசித்து நாபிமணித் தாழ்வடத்தால் சனிவாரந் தொடங்கி 1008-உருவேற்றச் சித்தியாகும்.

சமுதாயமாரல்

ச	ர	ஹ	ண	ப	வ
ர	ஹ	ண	ப	வ	ச
ஹ	ண	ப	வ	ச	ர
ண	ப	வ	ச	ர	ஹ
ப	வ	ச	ர	ஹ	ண
வ	ச	ர	ஹ	ண	ப

இந்த சக்கரத்தை வெள்ளி அல்லது தங்க ரேக்கில் வரைந்து எழுத்துக்களை யடைத்து, பதுமாசனத்தில் கிழக்கு முகமாக விருந்து பூசித்து, உருத்திராக்ஷத் தாழ்வடத்தால் 1008-உரு தினம் செபிக்கச் சகல காரியமும் சித்தியாகும்.

சடாக்ஷரமாரல் முற்றிற்று.

கந்தர் சஷ்டி கவசம்

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்—கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந்தன்னை.

அமரரிடர் தீர வமரம்புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரஹணபவனார்
சிஷ்டருக்குதவுஞ் செங்கதிர்வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச்சதங்கை
கீதம்பாடக் கிண்கிணியாட
மையநடஞ்செயு மயில்வாகனனார்
கையில்வேலாலெனைக் காக்கவென்றுவந்து
வரவரவேலா யுதனார்வருக
வருகவருக மயிலோன்வருக
இந்திரன்முதலா வெண்டிசைபோற்ற
மந்திரவடிவேல் வருகவருக
வாசவன்மருகா வருகவருக
நேசக்குறமகள் நினைவோன்வருக
ஆறுமுகம்படைத்த வையன்வருக
நீறிடும் வேலவன் நித்தம்வருக
சிரகிரிவேலவன் சீக்கிரம்வருக
சரஹணபவனார் சடுதியில்வருக
ரஹணபவச ரரரரரரர
ரிஹணபவச ரிரிரிரிரிரிரி
நிணபவசரஹ நிற நிற நிறென
விணபவசரஹ வீரா நமோநம
வசரஹணப வருகவருக
அசுரர்குடிகெடுத்த ஐயாவருக
என்னையாளும் இளையோன்கையில்

பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்தவிழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக்காக்க வேலோன்வருக
ஐயும்கிலியும் அடைவுடன்சௌவும
உய்யொளிசௌவும் உயிரையுங்கிலியும்
கிலியும்சௌவும் கிளரொளியையும்
நிலைபெற்றென்முன் நித்தமுமொளிரும்
சண்முகன்றீயும் தனியொளியொவ்வும்
குண்டலியாஞ்சிவ குகன்றினம்வருக
ஆறுமுகமும் அணிமுடியாறும்
நீறிடுநெற்றியும் நீண்டபுருவமும்
பன்னிருகண்ணும் பவளச்செவ்வாயும்
நன்னெறிநெற்றியில் நவின்றணிச்சுட்டியும்
ஈராறுசெவியில் இலகியமார்பில்
ஆறிருதிண்புயத் தழகியமார்பில்
பல்பூஷணமும் பதக்கமுந்தரித்து
நன்மணிபூண்ட நவரத்தினமாலையும்
முப்புரிநூலும் முத்தணிமார்பும்
செப்பழகுடைய திருவயிறுந்தியும்
துவண்டமருங்கிச் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம்பதித்த நற்சீராவும்
இருதொடைபழகும் இணைமுழந்தாளும்
திருவடியதனிற் சிலம்பொலிமுழங்க
செககண செககண செககண செககண
மொக மொக மொக மொக மொகமொக மொகமொகென
நக நக நக நக நக நக நகென
டிகு குண டிகு டிகு டிகு டிகு குண்டிகென
ர ர ர ர ர ர ர ர ர ர ர ர ர ர ர
ரி ரி ரி ரி ரி ரி ரி ரி ரி ரி ரி ரி ரி ரி ரி
டு டு டு டு டு டு டு டு டு டு டு டு டு டு டு
டகுடகுடிகுடிகு டங்குடிங்குகு
விந்துவிந்து மயிலோன் விந்து
முந்துமுந்து முருகவேண்முந்து
எந்தனையாளும் ஏரகச்செல்வ

மைந்தன்வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லா லா லா லா லா லா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்திருவடியை யுருதியென்றெண்ணும்
என்னகம்வைத்துன் இணையடிகாக்க
என்னுயிருக்குயிரா இறைவன் காக்க
பன்னிருவிழியாற் பாலனைக்காக்க
அடியேன்வதனம் அழகுவேல்காக்க
பொடிபுனைநெற்றியைப் புனிதவேல்காக்க
கதிர்வேலிரண்டும் கண்ணினைக்காக்க
விதிசெவியிரண்டும் வெற்றிவேல்காக்க
நாசிகளிரண்டும் நல்வேல்காக்க
பேசியவாய்தனை பெருவேல் காக்க
முப்பத்திருப்பல் முனைவேல்காக்க
செப்பியநாவைச் செவ்வேல்காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல்காக்க
என்னிளங்கழுத்தை இனியவேல்காக்க
மார்பையிரத்தின வடிவேல்காக்க
சேரிளமுலைமார் திருவேல்காக்க
வடிவேலிருதோள் வளம்பெறக்காக்க
பிடரிகளிரண்டும் பெருவேல்காக்க
அழகுடன்முதுகை அருள்வேல்காக்க
பழுபதினாறும் பருவேல்காக்க
வெற்றிவேல்வயிற்றை விளங்கவேல்காக்க
சிற்றிடையழகுறச் செவ்வேல்காக்க
நாணாங்கயிற்றை நல்வேல்காக்க
ஆண்குறியிரண்டும் அயில்வேல்காக்க
பிட்டமிரண்டும் பெருவேல்காக்க
வட்டக்குதத்தை வல்வேல்காக்க
பணைத்தொடையிரண்டும் பருவேல்காக்க
கணைக்கால்முழந்தாள் கதிர்வேல்காக்க
ஐவிரலடியில் அருள்வேல்காக்க
கைகளிரண்டுங் கருணைவேல்காக்க
முன்கையிரண்டும் முரண்வேல்காக்க

பின்கையிரண்டும் பின்னவளிருக்க
நாவிற்சரஸ்வதி நற்றுணையாக
நாபிக்கமலம் நல்வேல்காக்க
முப்பானடியை முனைவேல்காக்க
எப்பொழுதுமெனை எதிர்வேல்காக்க
அடியேன்வசனம் அசைவுளநேரம்
கடுகவேவந்து கனகவேல்காக்க
வரும்பகறன்னில் வச்சிரவேல்காக்க
அரையிருடன்னில் அனையவேல்காக்க
ஏமத்தில்சாமத்தில் எதிர்வேல்காக்க
தாமதநீக்கிச் சதுர்வேல்காக்க
காக்க காக்க கனகவேல்காக்க
நோக்க நோக்க நொடியினோக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லிசூனியம் பெரும்பகையகல
வல்லபூதம் வலாஷ்டிகபேய்கள்
அல்லறபடுத்தும் அடங்காமுனியும்
பிள்ளைகடின்னும் புழக்கடைமுனியும்
கொள்ளிவாய்ப்பேய்களும் குறளைப்பேய்களும்
பெண்களைத்தொடரும் பிரமராக்ஷதரும்
அடியனைக்கண்டால் அலறிகலங்கிட
இரிசிகாட்டேரி இத்துன்பசேனையும்
எல்லிலுமிருட்டிலும் எதிர்படுமன்னரும்
கனபூசைகொள்ளும் காளியோடனைவரும்
இட்டாங்காரரும் இருபலபேய்களும்
தண்டிபக்காரரும் சண்டாளர்களும்
என்பெயர்சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனையடியினில் அரும்பாவைகளும்
பூனைமயிறும் பிள்ளைகளென்பும்
நகமுமயிரும் நீண்முடிமண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற்புதைத்த வஞ்சனைதனையும்
ஒட்டியசெருக்கும் ஒட்டியப்பாவையும்
காசும்பணமும் காவுடன்சோறும்

ஓதுமஞ்சனமும் ஒருவழிப்போக்கும்
அடியனைக்கண்டால் அலைந்துகுலைந்திட
மாற்றான்வஞ்சகன் வந்துவணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற்கலங்கிட
அஞ்சிநடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோட
படியினின்முட்டப் பாசக்கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக்கட்டு
கட்டியுருட்டு கால்கைமுறிய
கட்டுகட்டு கதறிடக்கட்டு
முட்டுமுட்டு முழிகள்பிதுங்கிட
செக்குசெக்கு செதில்செதிலாக
சொக்குசொக்குச் சூர்பகைசொக்கு
குத்துகுத்து கூர்வடிவேலால்
பற்றுபற்று பகலவன்றணலெரி
தணலெரிதணலெரி தணலதுவாக
விடுவிடுவேலை வெருண்டதுவோட
புலியும்நரியும் புன்னரிநாயும்
எலியுங்கரடியும் இனிதொடர்ந்தோட
தேளும்பாம்புஞ் செய்யான்பூரான்
கடிவிடவிஷங்கள் கடித்துயிரங்க
ஏறியவிஷங்கள் இனிதுடனிறங்க
ஒளிப்புஞ்சுளுக்கும் ஒருதலைநோயும்
வாதஞ்சயித்தியம் வலிப்புப்பித்தம்
குடைச்சல்சிலந்தி குடல்விப்பிருதி
பக்கப்பிளவை படர்தொடைவாழை
கடுவன்படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்தரணைப் பருவரையாப்பு
எல்லாப்பிணியும் என்றனைக்கண்டால்
நில்லாதோட நீயெனக்கருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குறவாக
ஆணும்பெண்ணும் அனைவருமெனக்கா
மண்ணாளரசரு மகிழ்ந்துறவாகவும்
உன்னைத்துதித்து வுன்திருநாமம்

சரஹணபவனே சைலொளிபவனே
திரிபுரபவனே திகழொளிபவனே
பரிபுரபவனே பவமொளிபவனே
அரிதிருமருகா அமராபதியைக்
காத்துத்தேவர்கள் கடுஞ்சிறைவிடுத்தாய்
கந்தாகுகனே கதிர்வேலவனே
கார்த்திகைமைந்தா கடம்பாகடம்பனை
இடும்பனையழித்த இனியவேல்முருகா
தணிகாசலனே சங்கரன்முதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல்முருகா
பழனிப்பதிவாழ் பாலகுமரா
ஆவினன்குடிவாழ் அழகியவேலா
செந்தின்மாமலையுறும் செங்கல்வராயா
சமராபுரிவாழ் சண்முகத்தரசே
காரார்குழலாள் கலைமகணன்றாய்
என்னாவிருக்க யானுனைப்பாட
எனைத்தொடர்ந்திருக்கும் எந்தைமுருகனை
பாடினேனாடினேன் பரவசமாக
ஆடினேன்பாடினேன் ஆவினன்பூதியை
நேசமுடன்யான் நெற்றியிலணியப்
பாசவினைகள் பற்றதுநீங்க
உன்பதம்பெறவ உன்னருளாக
அன்புடனிரக்ஷி அன்னமுஞ்சொன்னமும்
மெத்தமெத்தாக வேலாயுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன்வாழ்க
வாழ்கவாழ்க மயிலோன்வாழ்க
வாழ்கவாழ்க வடிவேல்வாழ்க
வாழ்கவாழ்க மலைக்குருவாழ்க
வாழ்கவாழ்க மலைக்குறமகளுடன்
வாழ்கவாழ்க வாரணத்துவசம்
வாழ்கவாழ்க வறுமைகணீங்க
எத்தனைக்குறைகள் எத்தனைப்பிழைகள்
எத்தனையடியேன் எத்தனைசெய்தால்
பெற்றவனீகுரு பொறுப்பதுன்கடன்

பெற்றவள்குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரியமளித்து
மைந்தனென்மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திடவருள்செய்
கந்தர்சஷ்டி கவசம்விரும்பிய
பாலன்றேவ ராயன்பகர்ந்ததைக
காலையில்மாலையில் கருத்துடனாளும்
ஆசாரத்துடன் அங்கந்துலக்கி
நேசமுடனொரு நினைவதுவாகக்
கந்தர்சஷ்டிக் கவசமிதனை
சிந்தைகலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள்முப்பத் தாறுருகொண்டு
ஓதியேசெபித்து உகந்துநீறணிய
அஷ்டதிக்குள்ளோர் அடங்கலுவசமாய்த்
திசைமன்னரெலாஞ் செல்வந்தருவர்
மாற்றலரெல்லாம் வந்துவணங்குவர்
நவகோள்மகிழ்ந்து நன்மையளித்திடும்
நாமகளெனவும் நல்லெழில்பெறுவர்
எந்நாளு மீரெட்டாவாழ்வான்
கந்தர்கைவேலாங் கவசத்தடியை
வழியாற்காண வெருண்டிடுபேய்கள்
விழியாய்க்காண மெய்யாய்விளங்கும்
பொல்லாதவரைப் பொடிபொடியாக்கும்
நல்லோர்நினைவில் நடனம்புரியும்
சர்வசத்துரு சங்காரத்தடி
அறிந்தெனதுள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கும் விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகையதனால்
இருபத்தேழவர்க் குவந்தமுதளித்த
குருபரன்பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக்குழந்தை சேவடிப்போற்ற
எனைத்தடுத்தாட்கொள் ளெனதுள்ளம்
மேவியவடிவிரு வேலவாபோற்றி
தேவர்கள்சேனு பதியேபோற்றி

குறமகள்மனமகிழ் கோவேபோற்றி
திறமிகுதிவ்விய தேகாபோற்றி
இடும்பாயுதனே இடும்பாபோற்றி
கடம்பாபோற்றி கந்தாபோற்றி
வெட்சிபுனையும் வேலேபோற்றி
உயர்கிரிகனக சபைக்கோரரசே
மயினடமிடுவோய் மலரடிசரணம்
சரணஞ்சரணம் சரஹணபவஓம்
சரணஞ்சரணஞ் சண்முகாசரணம்.

கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.

சுப்பிரமணியர் மந்திரம்

ஹரிஓம் சிவனொரு முருகா அறுமுகவடிவேல் கந்தா குமரா எந்தனுக்கருள் புரிவாய், என்வினைகளை யறப்பாய் ஏறியமயிலும் சூரசம்மாரா, சுப்பிரமண்யா மூவிருகரமம் முகந் தனில் தரித்தாய், வள்ளி தெய்வானை மனோகரஸ்வாமி விபூதி யொருகை வாளொருகை வல்லயமொருகை சூலமொருகை சக்குமாந்தடி யொருகை அம்பொருகை வில்லொருகை ஆயுத மொருகை, கபாலமொருகை தண்டாயுதமொருகை, பன்னிரு கையால் ஆயுதமெடுத்துப் பிரயோகம்பண்ண எரிஎரி வந்த கொலைபாதகம் வழிகட்டுப் பேய்களும் கொள்ளிவாய்ப் பிசாசும் குட்டிச் சிறுதலைகளும் பல பல எதிர்த்துப்பற்றி யெறித்திடு, அரனருள் சுதனே, அத்தனே, சூர சங்காரனே சித்தனே சிவ சுப்பிரமணியக் கடவுளே மூல மந்திரம்-ஓம் சவுக்குலிங்காய நம: சவுடாதாராய நம: வாலாயினம் புலியாயினம்.



உருவு 1200 சுத்தபூஜை.

இந்த இயந்திரத்தை குளுசமாடிக் கட்டவும். காத்து கருப்பு முதலியதும் பாலகிரகமானதுகளும் தீரும், மற்றும் பயம், சோக்கம் அச்சமுந்தீரும். பிசாசுகளுக்கும் தரையிற் கீறி குந்தவைக்கவும் ஆடும் சகல தோஷங்களும் தீரும்.

கந்தர் கவசம்

வெண்பா

நினைவா ணிருவினைபோம் நெஞ்சினினைப்பவர்க்கு
கனிவாய் பலநலமுங் காட்டுந்—தனைநாடி
வந்தனைசெய்வோற்கு வாழுதவுஞ் செங்கதிர்வேற்
கந்தர் கவசங் கூறுங்கால்.

அமரர் துயர்தீர ;அன்றுபொருந்த
குமரனடி:போதினையே :கூறு.

ஆசிரியப்பா

சரஹணபவகுக சண்முகமுருகா
குறமகட்டழுவிய குஞ்சரமுருகா
கருக்குழிதனில்விழார் கண்டுமகிழத்
திருப்பரங்குன்றினிற் றிகழ்ந்தருண்முருகா
மந்திரமுனிவோர் வந்துவழிபடச்
செந்திநகரிற் சேர்ந்தருண்முருகா
காவியுந்தண்டுங் கண்டோர்பரவ
ஆவினன்குடியி லடங்கருண்முருகா. 1
நீரகத்தோர்க்கு னீந்தலுந் தொழவும்
ஏரகவெற்பி லெழுந்தருண்முருகா
வந்தமாதவர் வகைவகைதுதிசெயக்
கந்தமாதனத்திங் கலந்தருண்முருகா
அயிலைப்பொருவிழி யரம்பைகள்பரவக்
கயிலைச்சிலம்பிற் கமழ்ந்தருண்முருகா
கருமலைபொடிபடக் கண்டவர்கழ ட்
திருமலையடியிற் சிறந்தருண்முருகா. 2
வேங்கையுடையவனை வேதியர்துதிக்க
வேங்கிடகிரிவயின் விரைந்தருண்முருகா
பணியணிபரசிவன் பழவறைப்பொருள்செயத்
தணிகையங்குவட்டிற் றழைத்தருண்முருகா
சள்ளிருடன்வழி ஞச்சியார்கலமுற
வள்ளிமலையில் வாழ்ந்தருண்முருகா
கன்றூல்விளவெறி கன்னல்சிலமுறக்
குன்றத்தூரிற் குளித்தருண்முருகா. 3
இழுக்கண்டவிர்த்தல் மிகுந்தருளணிெ ழக்
கழுக்குன்றிடத்திற் கனிந்தருண்முருகா
சூறைபாம்புனல்சுழல வழிபடத்தொழும்
மேன்மையாயின் மிடமருண்முருகா
குயிலாமெனுமொழிக் குஞ்சரிமகிழ்வுற
மயிலாசலத்தில் ..சியர்தருண்முருகா
துரிகுலத்தவர் பலர்தூநலமுடைவாள்
திரிசிரமலையிற் றிகழ்ந்தருண்முருகா. 4

பொற்பரியவர்நலம் பொருந்தபின்றர்க்கக்
கற்குடியகத்திற் கலன்பெருமுருகா
சிரத்தையுடன்பணி சிறியோழகுற
இரத்தினகிரியின் இருந்தருண்முருகா
மூராதவிடையவ ரிருபுறமருவ
விராலிமலையில் விரைந்தருண்முருகா
அதிபதியாகிய வமலன்றுதிசெய
விசும்பகமலையில் விரைந்தருண்முருகா. 5

கொங்கொடலர்தொடு குறவரணிப்பெறச்
செங்கொடதனிற் சேர்ந்தவுண்முருகா
கல்லிழைநேர் கலந்துவழிப்படக்
கொல்லிமலையிற் குழைந்தருண்முருகா
எனமாகிய விறைவனபதம்பெற
ஞானமலையி னயர்ந்தருண்முருகா
ஒப்புயர்வில்லா வொருவனருளுறச்
செப்புவெற்பிற் செழித்தருண்முருகா. 6

இருடிகளிருவினை இளைப்புறவண்ணல்
கிரிடிமலையிற் குறித்தருண்முருகா
எங்குளபொருளு மேற்பவர்பெற்றுயக்
கொங்கணக்கிரியிற் கூர்ந்தருண்முருகா
இடுங்குணம்பெரிதோர் இறைமகளுயிர்பெறக்
கொடுங்குன்றந்தனிற் குளித்தருண்முருகா
பன்றிக்கனிற்குட் பரன்பிரணவம்பெறக்
குன்றிக்குடியிற் கொடுத்தருண்முருகா. 7

வசுக்கள்வழியுற வந்துபரவிடப்
பசுமலைபீடத்திற் பதிந்தருண்முருகா
நதியணியானிலை நற்றவகுனிப்பெறப்
பொதிகைமலையிற் பொழிந்தருண்முருகா
அழகியபாண்டிய னடியிணைப்பெற்றுயர்
கழுகுமலையிற் கவர்ந்தருண்முருகா
துள்ளியவினையிற் றொடக்குருப்பால
வள்ளியூரில் வசித்தருண்முருகா 8

எதினறுதலத்தோ ரிடருருவண்ணம்
கதிர்காமத்திற் கசிந்தருண்முருகா
கழையவரடியதன் கவின்பெறப்போற்றப்
பழமுதிர்சோலையிற் பணிந்தருண்முருகா
வருகவருக வருகமுருக
கருணையுடனே கண்ணெதிர்கண்டு
ஆறுமுகமு மழகியமுடியும்
நீறுபுனைந்த நிகரிலாநெற்றியும். 9

புகழுருபுருவமும் புனைந்தசுட்டியும்
மகரகுண்டல மாட்டியசெவியும்
கண்டிகைபூண்ட கவின்பெருகனமும்
விண்டிசைமதிக்க விளங்குமார்பும்
பன்னிருதோளும் பவளவாயும்
கன்னியரிருவர் கலந்தகோலமும்
அபயவஸ்தமும் அமிர்தமயிலும்
சுபமருள்மங்கய சுந்தரவடிவும். 10

கோழிக்கொடியும் கூர்கவவீரகம்
வாழிபொழிபகர் வானவர்குழாவும்
தோற்றவடிமைமுன் சொகுசுடன்வந்து
மாற்றலர்தம்மை வதைத்தருண்முருகா
ஓம்வசியவசிய ஓங்காரமுருகா
ஸ்ரீம்ஹரீங்சிவசிவ ஸ்ரீங்காரமுருகா
கம்சிங்சரஹண பவமேவாம்முருகா
ரம்ரம்ஹணபவ வாசஜயும்முருகா. 11

ஹம்உங்ன்னபவ சரகிலியும்முருகா
னம்ணங்பவ சரஹசௌவும்முருகா
பம்பங்பவசர ஹண ஹரீயும்முருகா
வங்வங்வசரஹணப ஸ்ரீயும் முருகா
சிவசிவசிவசிவ சிவாயநமஹ
சங்கரசங்கர சபிலொளிபவாய
ஓம் திரிபுரபவ ஓம் திகழொளிபவ
ஓம்பரிபுரபவ ஓம்பவஞொளிபவ. 12

ஓம்குருபரபவ ஓம்குகனொளிபவ
ஓம்சிவசிவபவஓம் சிகாரநம:
ஓம்ஆம்சிரீயும் ஓம்கிலியும்ஐயும்
ஆம்ஓம் ஆவ்வும் அம்சிவாயநம:
ஓம்ஆம்கிலியும் சவ்சிறீயுமிறீவும்
ஓம்இறீயும்சிறியும் சவ்கிரியும்ஐயும்
ஞானமுருகா வழகியமுருகா
வானமுருகா வரமருண்முருகா. 13

அல்லலாந்தொழிலை யகற்றிடுமுருகா
பில்லிசூனியம் பெயர்த்தெறிமுருகா
கட்டமாம்வினையைக் களைந்தெறிமுருகா
குட்டிமோகினியைக் குலைத்திடுமுருகா
கறுப்பனைவீரனைக் களைந்திடுமுருகா
குறிபகர்மாடனை கொளுத்திடுமுருகா
இடாகினிதன்னை வழித்தெறிமுருகா
அடாதகுரளியை யடக்கிடுமுருகா. 14

கொள்ளிவாய்ப்பேயைக் குலைத்திடுமுருகா
கள்ளிருண்முனியை நசித்திடுமுருகா
துஷ்டதேவதையைத் துரத்திடுமுருகா
அஷ்டமாசித்தியை யருள்செயுமுருகா
தலைவலியதனைத் தவிர்த்திடுமுருகா
கலைவலியதனைக் கவித்திடுமுருகா
மூலமதனை முறித்திடுமுருகா
சூலையதனைத் துளைத்திடுமுருகா. 15

கண்ணோயதனைக் களைந்திடுமுருகா
மண்ணோயதனை மறித்திடுமுருகா
குன்மமதனைக் குலைத்திடுமுருகா
சென்மவினையைத் திருப்பிடுமுருகா
எறியவிஷத்தை இறக்கிடுமுருகா
சிறியபாவைச் சிதைத்திடுமுருகா
பூக்கமழ்குறுஞ்சிமுற் புகலுமுறுப்பை
காக்கமுருகா காக்கமுருகா. 16

வாழிமுருக வாழிமுருக
வாழிமுருக வாழிமுருக
முருகமுருக முருகமுருக
முருகமுருக முருகமுருகனே,

கந்தர் கவசம் முற்றிற்று.

சுப்பிரமணியர் விஞ்ஞை

சீர்மேவும்வாலை யபிராமிசூலி
திரிபுரைசங்கரி கௌரிமாரிவாமி
கார்மேவுமைமட சங்காரிதுர்க்கை
சாமுண்டிகங்காளி தந்தமைந்தன்
கார்மேவும் அத்திமுகன் ஒற்றைக்கொம்பன்
கருணை திருநயனமிரு கமலபாதம்
பார்மேவும் அறுமுகவன் குறுமுனிக்குப்
பகர்சர்வ விஞ்ஞைக்குக் காப்பதாமே. 1

சிவ்வழலுமுருத்திரனு முருகன்முடியானன
சேவலதுபுயமாகி மகரநிறமானன்
நவ்வினியவிதிக்குமா னிடதுபுயமானன்
நற்சத்திவடிவேலன் சூரரையும்வென்றான்
மவ்வுசிவ்வொடுநத் வெனிநதிரியவெழுத்தை
மசிநசியெனச்செபித்து உருலட்சமாகில்
வெவ்வுணர்வார்போல வினையகலுமிதுதான்
வேல்முருகா சர்வசங்காரவிஞ்ஞை. 2

மேலானகுப்பமுனி பெருகவின்னும்
வேல்முருகா சர்வசங்காரவிஞ்ஞை
வாலாயமாகவொரு பிரம்பிற்பாச்சி
வலமிடந்தோள் சிரசிலுமுன் றட்சரத்தையூன்றி

காலாகவருவேக சூரரையும்வெல்லும்
கனிவுகொண்டு லக்ஷமுருசெபித்தபேர்க்கு
ஆலாலவிஷங்களுமே நாஸ்தியாகும்
அதனில் விஞ்சைச்சின்னம் வரலாறுகேளே. 3

கேளுமூன்றெழுத்துருக்கள் பிரம்பிடைக்கொண்டு
கெவனமுன்னிவிபூதிதரித் தெதிரேபார்க்கில்
வாளுருவிகோன்வருவார் முறிபட்டோடும்
மகாவிஞ்சைதன்னையுமே தகட்டிற்கீறி
நீலக்ஷம்உருசெபித்து சிரசிலணிவோர்க்கு
கோரகஉண்டையம்பு விலகியோடும்
நாளுலவுமிரவுபகல் சயனிக்கும்போது
ரகஸ்திரிபட்சரத்தை முகத்திலொட்டே. 4

ஒட்டியது ஒன்றிடத்தில் கணக்காணாது
ஓர்சர்ப்பந்தீண்டாபடுத் தூங்கிப்போகும்
முட்டுவயிற்றுதித்தகர்ப்பம் மரிக்தாலென்னை
முனையறுகால்மந்திரித்து சிரம்வயிற்றிற்பூச
அட்டபிள்ளைசாகாது வெளிப்படுஞ்சேய்
அதுவுமேசுகமாக பிறக்குந்தானே
தொட்டிகட்டிலெத்தனைபே ருடன்சென்றாலும்
சுண்டக்காயளவுகல் லாதிக்கேளே. 5

ஒதியேகல்உருமால் முடிந்துகொண்டு
ஊர்பயணம்போகும்போ தொருவருக்கும்
தீதுவிடசெந்துக்கள் மிதிபடாது
நினந்திரியாக்ஷாத்தை நினைவிலுன்னி
வாதிக்குச்சர்வ ஜனவசியமாகும்
வையமெலாந் தன்கைக்குளடங்கிநிற்கும்
சாதகமாய்கோடியுரு செபிக்கும்போது
தானிருக்குமூர் தனிலே விஷமண்டாதே 6

அண்டாதுபேவல் பில்லிசூனியங்கள்
அணுகாதுராவேறுங் கண்ணேறுங்கூட
மண்டானபேர்களும் நல்வார்த்தைசொல்வார்
வரைந்துவரைந் தெந்திரத்தைச்சிரம்பூண்டோர்க்கு

பண்டானவினைராச பிளவைவீக்கம்
படுபருக்கள்சிரங்கு குஷ்டம்பெருவியாதிக்கே
விண்டானஎண்ணை ஜலம்விபூதிபிரம்பாலே
வியாதியெல்லாமாரண மூன்றெழுத்தினாலே. 7

எழுத்தைக்கேள்மூன்றட்சர விஞ்ஞையின்னம்
மியம்பவேகுருமுனியை நோக்கியேபார்
வழுத்தபர்வசங்கார திரியாட்சரத்தை
மவுனமுன்னிலட்ச முருசெபித்திடுங்கால்
கழுத்துவாய்செவிகன்னம நெஞ்சிருய்யம்
கடிதடமிலிங்க வங்கைகால்களோடு
தழுத்தசிகைசிரசில் கண்டுகண்டமாலை
சற்குருவைநினைந்து கொண்டுபிரம்பாலேநீவே. 8

நீவியேவிபூதியுஞ் சலந்தெளித்து
நிதமிருபோதுட் கொள்ளெட்டுநாளில்
பாவியர்க்குவானாலும் நாஸ்தியாகும்
பழவினைக்கூறானாலும் நாஸ்தியாகும்
மாவலுவாம்சடாமுனியும் பிரமமராக்ஷதையும்
மந்திரவாதிகளுக்கு வணங்காப்பேயும்
மேவிசெந்துக்கிரகம் வேதாளக்கிரகம்
மிதவெச்சக்கிரகம் நவக்கிரகம்போமே. 9

கிரகசென்மாங்கிரகம் அகோரக்கிரகம்
கிளர்சநயாசிக்கிரகம் கொல்மாலைக்கிரகம்
சர்வதுஷ்டகிரகங்கள் தொட்டிருந்தால்
தந்தமதுகிடைந்திருந்த லண்டருக்கு
வெருவிவிழித்திடுங்கண்ணை மெருட்டிப்பார்த்து
மேல்விழுந்தலறும் மெறுங்குறியைக்கண்டு
மருவிய மூவிசையுஞ்சலம் சிரசில்விட்டு
மந்திர நீரைப்பிரம்பால் உச்சியிலேதட்டே. 10

தட்டியேஆயிரத்தெட் டுருசெபித்து
சங்காரவிபூதியினா லெரியும்போது
சுட்டியுந்தீவட்டிகொண்டு கொளுத்தினாற்போல
சோர்ந்துநடுநடுந் துபேழயாகிரன்போறேன்

விட்டிடைய வெகுநாளாய்க் கார்த்தேனிந்த
வேளையஞ்சுமரக்கால் நீர்விரைந்துதாரும்
திட்டமதாய்ச்சாப்பிட்டு போறேனென்று
சென்றதற்கு அடையாளம் செப்பக்கேளே. 11

செப்புகிறேன்சிதம்பர சக்கரத்தினாலே
தேகமெல்லாங்கட்டுண்டு தியங்குமையா
தப்புரைசொல்லேனிதோ போறேனீசன்
றன்மேலே ஆணையிட்டுப் போறேனென்னும்
அப்படியேபோனதற்கு சோதனைகள்கேளே
அருகிருந்தமரத்தினுட் கொம்பினூடும்
ஒப்பரியபெரும்பாறை அம்மிதாக்கி
உளராமல்வெருண்டு பயந்தோடுந்தானே. 12

ஓடுமோர்முயல்கண்டன் பிரமகண்ட
னுடற்குழியாம் குமரகண்டன் மகரண்டன்
நீடுமொருகருமத்தால் வரும்வியாதிக்கே
நிதம்பஞ்சகவ்வியம் கோமூத்திரத்தினாலும்
கூடுமொருசாகரா மாமயிரமுஞ்செய்து
குறையாமல்நிதமுமரை மண்டலங்கொடுத்தால்
நாடுமொருராப்பகலும வலிப்புக்கெல்லாம்
ராசனமுயல்கண்டன் வலியுந்தானே. 13

வலிதாகப்போகாட்டா லீசன்கோலம்
மலத்திலுன்னிவிரித்த சடைவீரப்பல்லும்
நவிவானமகர குண்டலமுமூன்று
நயனமுருரோமங்கள் அளப்பிரம்பால்
புலியாடையுடுத்திமான் மழுகரத்திலேந்திப்
பூங்கொன்றை மாலையது புனைந்திருக்க
கெவியானபிரமனென்று சிந்தையெண்ணி
கேசரிமேல்மூலத்தை வைத்துத் தாக்கே. 14

சுப்பிரமணியர் விஞ்ஞை

முற்றிற்று.

சுப்பிரமணியர் கவசம்

ஓம்: சிவசிவாயா, சண்முகாயா, மூவிரு முகமும், மூவிரு முடியும், ஆறிரு காதும், பன்னிரு தோளும், மெய்ப்புரி மார்பும், முப்புரிநூலும், சொட்டையும், சுருதியும், உபய பாதமும், அபய வஸ்தமும், புண்டரீகம்போல மலர்ந்த தண்டையும், ஏறியமயிலும், சீறிய வரவமும், வீரிய காலத்தில் வேலாயுதமும், கூரிய கோழிக் கொடியொரு கரமும், கனம்பெறவணிந்த கடப்பமாலையும், பவழவாயும், பன்னிரு நயனமும், அடைவுடனணிந்த ஆயுதவகையும், பரிசையும், வாளும், கத்தியும், சூலமும், தண்டுடன் தடியும், ஆயிரமாதித்த, திரண்டுருண்ட மேனியும், சர்வாபரணமும் தரித்த வழகும், வாணவர் தேவியை மருவிய புயமும், கானக வள்ளியைக் கட்டியகரமும், ஆயிரங் கணங்கள் ஆயுதமெடுப்ப ஆயிரங்கணங்கள் அடிதொழுதேற்ற, சூரரைக்கடிந்து மேருவைப் பிளந்தாய், அமராபதி வாழ்சரவணப் பிரதாபா, சண்முகராயா, வடிவுள குமாரா மாயோன் மருகா, மூவரதிபற்கு முதலாய் முளைத்த தேவாதிபனே, சேவகா சரணம், முத்தா சரணம், மூர்த்தி சரணம், கர்த்தாசரணம், கந்தனே சரணம், எந்தன் மனதில் எது வேண்டியதும், தந்து ரக்ஷிப்பாய் சரவணபவனே, சரணம் சரணம், சுவாமி சரணம்.

ச	ர	ஹ	ண	ப	வ
ர	ஹ	ண	ப	வ	ச
ஹ	ண	ப	வ	ச	ர
ண	ப	வ	ச	ர	ஹ
ப	வ	ச	ர	ஹ	ண
வ	ச	ர	ஹ	ண	ப

மூலமந்திரம்

ஓம் அய்யும் கிலியும் சவ்வும் சரஹணபவ, சயஞொளிபவ, திரிபுரபவ, திகழொளிபவ, பரிபுரபவ, பவஞொளிபவ, அரிதிரு

மருகா, ஓம் குருகுரு பருமரு ஓம்குமாரா ரணக்களம் உருவு 1200-செபிக்க சித்தியாம்.

இதன் பலன்

சித்தபூஜை விபூதி பிடிக்கவும், காத்து சோங்கலுக்கு மந்திரிக்கவும், பிசாசு ஓட்டவும், தரையில் சக்கிரம் போடவும், தோஷங்களுக்குத் தண்ணீரோதிடவும், குளிசங் கட்டவும் சகுணப்படும்

சுப்பிரமணியர் உடல்கட்டு மந்திரம்

ஹரிஓம் சரவணபவா, சண்முகா, சத்துரு சங்கார ரூபனு, இசண்டமா சண்முக வேலாயுதமயா, அறுமுகவா, வுமையவள் புத்திரா, கோலாகலா, அமரர்சிகாமணி, ஆனந்த ரூபா, குறமகள் மணவாளா, குக்குபத்துவஜா, குங்குமவருணு, கோடி சூர்யப்பிரகாசா, பிரபலகுமாரா, ஸ்ரீதிகா, ஆறுசபை காரணம், பில்லி, பாம்புகள், சூனியப் பிசாசுகள், பிதறியோட, பாதம் உனது தலைமுதலுடல் முப்பத்திரண்டும் உருமங்கார்க்க, உனது வேலும் சுற்றிக்கார்க்க, மயிலினிவண்ணு முருகா கார்க்க, உச்சி உருத்திரன் கார்க்க, நெற்றி நீலகண்டன் கார்க்க, கண்ணை கணபதி கார்க்க, மூக்கை முக்கண்ணர் கார்க்க, வாயை வாணி கார்க்க, பல்லை பகவதி கார்க்க, நாக்கை நாராயணன் கார்க்க, உள் நாக்கை ஊர் காளி கார்க்க, காது காளி கார்க்க, கன்னங் காலன் கார்க்க, கழுத்தை கருடன் கார்க்க, தோலை துர்க்கி கார்க்க, மார்பை மகாதேவர் கார்க்க, முதுலை முதலவர் கார்க்க, வயர் வயரவர் கார்க்க, தொப்புள் துந்தமாதேவி கார்க்க, ஏரடு வாசல் கருடவாசல் ஈஸ்வரி கார்க்க தொடை துவாரபாலகர் முழங்கால் முதல்வர் கார்க்க, கணுக்கால் கண்ணன் கார்க்க, பாதம் பரஞ்சோதி கார்க்க, இறுதியும் இறையவன் கார்க்க, நங், துகாளி மதுரை கார்க்க, ஐயமென்னும் அரிகரவுத்திரன் கார்க்க, தென்திசை வீரபத்திரன் கார்க்க, வடதிசை வீர மாங்காளி கார்க்க, மேல்திசை வைரவர் கார்க்க, கீழ்திசை சதாசிவன் கார்க்க, எட்டுகாத திசையும், பதினாறு கோணமும், முன் சகல கோடி பூதப்பிரேத பிசாசு பிரமராக்ஷசுக ளெல்லாம் பறந்தோடிப் போகச் சுவாகா.

இவ்வுடல் கட்டை தனக்கு கட்டிடில் ஒருதரம் ஓதி இடத் தோளிலிருந்து வலது தோள் வரையில் வாய்னு ஊதிக்கொள்ள

வும், பிறருக்கு இதைச் செபித்து அந்தந்த அவயவங்கள் மீது விபூதியைப் போட்டுவரவும், உடல் சுட்டாகும், யாதொரு பயமும் நேரிடாது. இதை எல்லாப் பிரயோகங்களுக்கு முன்னர் தன்னை கட்டிக்கொண்டே அக்கிரியைகளைச் செய்யவும் நன்மை. பேய் பிடித்தவளை ஆட்டிப் படுக்க வைக்கையில் இதை கட்டியே படுக்கவைக்கவும் மறுபடியும் அக்கிரகங்கள் யாதொரு தொந்தரையுஞ் செய்யாதிருக்கும்.

கட்டிக்கு மந்திரிக்க ஷ மந்திரம்

ஓம் பாலசுப்பிரமணியா, வைரவநாதா, உன் பாதம் வந்தடி பணிந்தேன் சூர சூலத்தாலே சூரரை வதைத்த சூர சங்காரா, காலகாலா, காலனையுதைத்த காலகண்டா, கண்டமாலை, கருணை மூலம் தொடை வாழை அக்குள் சிலந்தி; அரையாப்பு, முலைச் சிலந்தி, பக்கப்பிளவை, எரிப்பிளவை, நட்புச்சிலந்தி, கட்டு விட்டு கரைகரைந்து ஆலகால விஷங் கக்கினாற்போலே அந்நீர் வற்றி, செந்நீர்வற்றி, வீக்கம்வற்றி, விதிர்ப்புவற்றி, உலர்ந்து பலர்ந்து கரிந்து பொரிந்து போகச் சுவாகா.

ஓராங் கடல், இரண்டாங் கடல், மூன்றாங் கடல், நான் காங் கடல், ஐந்தாங் கடல், ஆறுங்கடல், ஏழாங்கடல், எட்டாங் கடல், ஒன்பதாங் கடல், பத்தாங் கடல், பத்தாங் கடலுக்கப் பால் பாற்கடல், பாற்கடலுக்கப்பால் ஆலா விருக்ஷம். ஆலா விருக்ஷத்தின் கீழே புத்தடிநாகன் புத்தடிநாகன் வயிற்றிற் பிறந்த நரிமூஞ்சிச் சிலந்தி, நாய்மூஞ்சிக் சிலந்தி, விலக்காட்டுச் சிலந்தி, விலக்கொடு சிலந்தி, நாலாயிரத்தி நானூற்றி நாற்பத் தெட்டுச் சிலந்தியும் சுப்பிரமணியர் சூலத்தினாலே குத்தி படு பிருத்திப் படுசுவாகா உரு-4008 செபிக்கவும்.

இம்மந்திரம் ஜெபித்து ஒன்பது விசையோதி வேப்பிலையி னாலாவது, விபூதியினாலாவது அல்லது மண்ணாட்டியினாலாவது மந்திரித்து உடையாக்கட்டிகள் கரையாக்கட்டிகள்மேல் விபூதி தூவி வாயினாலூதிவிடவும் அப்பருவுகள் உடைந்தாகிலும் அல்லது கரைந்தாகிலும், அமுந்தியாகிலும் போய்விடும்.

இதை முதலிற் பூசைவைத்துப் பிறகு சாம்பிராணி வற்றிக் கொளுத்தி வைத்துக்கொண்டும் உருபோட்டு வரவும். இதை காலை மாலை இரண்டு மூன்றுநாள் மந்திரிக்கவும் நன்மையாம்.

தேளு மந்திரம்

ஓம் வாஞ்சக்காலும், வடிந்த மூக்கும், வருசணப் பிள்ளையார் தண்டையுஞ் சதங்கையும் தாவடத்தில் வீற்றிருக்கும் கருமலைக்கும் செம்மலைக்கும் அப்புறத்திலே கன்னிபுத்திலே கருந்தேளும் செந்தேளும் கலந்து பறந்திருக்கும் ஒணுனுந் தேளும் ஒரு மரத்திலேற ஒணுனேறத் தேளிறங்க ஓம் காளி யிறங்கிவா, ஆகாசவாணி யிறங்கிவா, உன்னையும் என்னையும் படைத்த பிரம்மா வாணை யிறங்கிவா, பாசிபடர்ந்த பன்னீராயிர மந்திரத் தேளே படுபடு பராபர பாப்பார வெள்ளாட்டித் தேளே படுபடு சுவாகா, உருவு-1008 செபிக்கவும் சித்தியாம்.

இம் மந்திரம் ஜெபித்து மூன்று துடைப்பம் அல்லது ஒரு துடைப்பக் கட்டைக்கொண்டு மந்திரித்துக்கொண்டே இறக்கிவரவும் விஷம் ஏறியது இறங்கும் அப்பப்போது கேட்டு அக்கடிவாயிற் கொண்டுவந்து விடவும்.

சுளுக்கு மந்திரம்

ஓம் அண்டமுருக, ஆகாசமுருக, சூலமுருக, சுடுகாடு முருக, இங்கே சுளுக்கினால் ருத்திரன் விடு விடு நடு வீடு போகச் சுவாகா உருவு 1008-செபிக்கவும் சித்தியாம்.

இம் மந்திர மோதிக்கொண்ட மண்ணாங் கட்டியை வலது கையில் தமுட்டி சுளுக்கின இடத்தில் உதிரி மண்ணை விடவும். கடைசியில் கையினால் மூன்று விசை தடவி கீழிறக்கிவிடவும். இவர்த்தியாய்விடும்இன்னுமிதனைப்பலவிதமாய்மந்திரிப்பதுண்டு.

பிரசவத்திற்கு எண்ணெய்யோதும் மந்திரமும்

இந்திரன் விழுதப்புழுதி எமனிரைத்த யெள்ளு மந்திரக் குடத்து யெண்ணெய், மாசாத்துப் பிள்ளையார் தந்தயெண்ணெய், காளி தந்தயெண்ணெய் காளி தூதர்தந்த எண்ணெய் இவ்வெண்ணெயைக்கொண்டு மார்பில் தடவ குளிநிற்க, மாக்குடலும் பிள்ளையும் குத்திக்கிளறிக் கால் கடல் வந்து விழச் சுவாகா உருவு, 1008-செபிக்கச் சித்தியாம் இதை கிராணத்திற் செபிக்க நன்மை.

மாதர்கள் பிள்ளை பெறமாட்டாமல் பிரசவ வேதனைப் படுகையில் ஓர் செப்புக் கிண்ணத்தில் கொஞ்சம விளக்கெண்ணை விட்டு அதில் தான் அறுகம் புல்லினைப் பிடித்து அவ்வெண்ணை

யிற் போட்டு சுழட்டிக்கொண்டே மந்திரித்து வந்து மூன்று விசை வாயினலூதியும் கடைசியில் அவ்வறுகம்புல்லை மேலே தூக்கிப் பார்க்க எண்ணை தெளிவா யிறங்குமாகில் ஆணென்றும், குழப்பமா யிறங்குமாகில் பெண்ணென்றும், அறுகம்புல் முனை இரு பிளவாய் பிரியுமாகில் இரட்டைப்பிள்ளை யென்றும் சொல்லவும் சரியாயிருக்கும். அது கலைந்து சிதறி யிருக்கில் பிழைக்காதெனச் சொல்லவும்.

பாம்பு மந்திரம்

ஹரி ஓம் ஓங்காளா, அஞ்சலா, இலாவா, சேஷா, முந்திரீரோ, பக்தபஜாரே, விஜாரே மூலாக்கிரே, சரீர குருவுக்கு ஜகத்திமரே, பகத்தி புரோமந்திர மைசூர வாசா, உருவு 1008-செபிக்கச் சித்தியாம்.

பாம்பு கடித்தவனை மல்லாக்கப் படுக்கவைத்துத் தான் நேத்திரத்தினல் ஷியான் முகத்திலிருந்து இடுப்புவரையில் இவ்வெந்திர சூலம்போட்டு அவனது நெற்றியில் ந, நெஞ்சினில் சி, உந்தியில் ம, எழுதி லட்சயம் வைத்து வேப்பிலைக் கொத்தைத் தன் கையிற்பிடித்து உச்சியிலிருந்து மந்திரித்துக் கொண்டே இறக்கி வரவும் விஷமிறங்கும். அப்போது ஒரு மிளகாயைத் தின்னக் கொடுத்தால் அது காரமில்லாதிருக்கில் விஷமிறங்கவில்லை யென்றும், காரமாயிருக்கில் விஷமிறங்கி விட்டதென்றும் நிறுத்திவிடவும். அதன்பின் பச்சரிசி பச்சைபயர் கஞ்சி வார்க்கவும்.

பாம்பு தடை கட்டும் மந்திரம்

நீரெரிய, நிலமெரிய, நிலவாழைக் குறுத்தெரிய, பாம்பெரிய, படமெரிய, பாரான முப்புரமெரிய, சங்கெரிய, சங்

கெரிய, சக்கரந் தானெரிய, கொடி கொடி தானெரிய, கொல்லங் கொண்டு வந்தாலும், அலகு திறவாதே, ஆகெட ஓகெட ஓம்படு சுவாகா உருவு 1008-செபிக்க சித்தியாம்.

பாம்பு தடைகட்ட

வட்டமிட்டசூரியனே, மலையெழுந்தபகவானே, கட்டுபட்ட மிருகமெலாம் கட்டிவிட்டேன் விட்டேன் ஓம் நமசிவாயநம.

நல்ல பாம்பைத் தடைகட்ட வேண்டுமாகில் ஒரு சிட்டிகை மண்ணெடுத்துமுன் மந்திரத்தால் செபித்து அதின் மேற்போட அச்சர்ப்பம் ஓடாது ஒளியாது ஒடுங்கி அடங்கி நின்றுவிடும். இரையு மெடுக்காது அப்பாலுஞ் செல்லாது.

அந்த கட்டை யவிழ்க்க வேண்டுமாகில், மறுபடியும் ஓர் சிட்டிகை மண்ணெடுத்து பின் மந்திரமோதி அதின்மேற்போட அச்சர்ப்பமானதுமுன்போலத் தனதிடம்போய்ச்சேர்ந்துவிடும்.

பக்ஷி தோஷத்துக்கு

ஒருகடல், இருகடல், முக்கடல், நாற்கடல், ஐங்கடல், அறுகடல், எழுகடல், எண்கடல், ஒன்பதாங்கடல், பத்தாங் கடல், பத்தாங்கடலுக்கப்பால் பால்கடல், பால்கடலுக்கப்பால் ஆலவிருக்ஷம் ஆலவிருக்ஷத்தின்கீழ் மணிப்பெரும்நாகம் வயிற் றில் ஆணும் பெண்ணும் நாலுபக்ஷிகள் பிறந்து நாலுதிக்குகளு முண்டாக்கவேண்டி பரமேஸ்வரன் பரமேஸ்வரி பாதத்திலே போய்விழ நான் மந்திரிக்க, முட்டுதோஷம், குளி தோஷம், பக்ஷி தோஷம், பறவை தோஷம் விட்டோடிப் போகச் சுவாகா, ஓம்காளி ஒப்பிடாரி ஓம் நமசிவாய சுவாக உருவு 1008-செபிக் கச் சித்தியாம்.

ஒரு சொம்பில் சுத்தியாய் ஜலம் கொண்டுவர, அதில் வேப் பிலை ஒன்பது இணுக்கு அந்த ஜலத்திற் றோய்த்து கழட்டிக் கொண்டேயிருந்து ஒன்பதுதரஞ் செபித்து அக்குழந்தையின் முகத்திற் றெளித்து வாயிலுமூதவும். இப்படி மூன்று விசை தெளிக்கவும், மூன்று நாள் காலையில் மந்திரிக்க பட்சிதோஷம், பறவைதோஷம், முட்டு தோஷம் குளிதோஷம் முதலிய யாவுந் தீரும். பின்னும் கழிப்பு செய்தாலுஞ் செய்யலாம்.

சகல குருவி தோஷத்திற்கு மந்திரம்

ஓம் பொன்னொரு கலசம், பூவொரு கலசம், பொன்னும் நீரும் பொருந்திய கலசம், இந்திரனடியநீர், இறையவனடியநீர்,

சந்திரனடியசீர், சதாசிவனடியசீர், மந்திரனடியசீர், மகாதேவனடியசீர், அம்மையாடியசீர், ஆகாசப் பெண்களாடியசீர், துர்க்கையாடியசீர் துர்க்கா பரமேஸ்வரி யாடியசீர், முப்பத்து முக்கோடி தேவர்களாடியசீர் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளாடியசீர், அந்நீறு மிந்நீறுங் கொண்டோதினேன் குருவி தோஷம், கொக்குதோஷம்முட்டுதோஷம், குளிதோஷங்களென்னப்பட்ட 448-தோஷங்களும் பொரி பொரிஞ்சி, கரிகரிஞ்சிபோ கச் சுவாகா. உருவு 1008 செபிக்கவும் சகல தோஷங்களும் போம்.

இம் மந்திரத்தை முன்போல வேப்பிலை நீரால் மந்திரித்து அக் குழந்தைகளின் முகத்தில் மூன்று விசை மூன்று நாட்களில் ஒதி யிரைத்து நாலாவது விசை அச்சலத்தால் அதின் முகத்தைத் துடைக்கவும்.

நாய் வாய்க்கட்டு மந்திரம்

ஓம் வைரவா, ஆகாச வைரவா, இந்திர வைரவா, இமையோர் அலேகுரூர், என்மனந்தியங்குது, ஏதுக்குக் குலேக்குருய், அப்படிக் குலேத்தால் அரனாணை ஓம் பட்பட சவாகா, உருவு 1008-செபிக்க சித்தியாம்.

வாய்கட்டறுக்க வட்டமிட்ட பகவானே, மலேயெழுந்த மயேசுரானே, கட்டுபட்ட மிருகமெலாங் கட்டுவிட்டேன் விட்டேன் ஓம் நமசிவாயா என்று முன் மந்திரத்தால் ஓர் சிட்டிகை மண்ணெடுத்து மந்திரித்து குலேத்துக் கடிக்க வரும் நாயின் முகத்தின்மேற் போட, நாய் குலேக்காது கடிக்காது ஓடுங்கி ஓடிப்போய்விடும். இரையெடுக்காது குலேக்காது எட்டுநாளேக் குன்றிவிடும். இதற்குள் அந்த வாய்க்கட்டற, மஞ்சள்நீர் அந்த நாய் முகத்திற்றெளித்து பின் மந்திரஞ்செபித்து அதின் முகத்திலூதி கையினல் முகத்திலிருந்து தடவி யிறக்கவும் சுகுணமாய்விடும்.

பட்சிமுதல் மிருகக்கட்டு

ஓம் பகவதி ஓம் பைரவி என்னை யெதிர்த்துப் பகைத்து வந்ததெதையுங் கட்டுகட்டு கடுகென பட்சியைக்கட்டு, மிருகத்தைக்கட்டு, ஓம் காளி, ஓம் ருத்திரி, ஓங்காரி, ஆங்காரி, அடங்கலுங் கட்டினேன், சத்துருவைக் கட்டினேன், சபையைக் கட்டு, எதிரியைக்கட்டு, எங்குமேகட்டு சிக்வங் லங்லங் ஸ்ரீம் ஓம் சிவாயா நமசிவாய நம: உருவு 116-செபித்திட சித்தியாம்.

தான் எதையுங் கட்டுகையில் தனது உள்ளங்கையில் விபூதியைப் பரப்பி அடியில்வரும் சக்கிரமெழுதி மந்திரம் 108 செபித்து தாயித்தை செய்து வைத்துக்கொள்ளவும். சகல காரியமுஞ் செயமாம். இன்னும் பில்லி பிசாசு துன்பவினை விலகி யாவும், சுகுணமாம்.

இதற்குச் சக்கிரம்

மேற்படி கட்டவிழ்க்க ஓம் சரஹணப வாயாவென்று, சத்குரு கட்டு சபை கட்டு எங்குள்ள கட்டும் விட்டேன். என் குரு சுவாமி பேர்சொல்லி யேகமாய்க் கட்டவிழ்த்துவிட்டேன். ஓம் ஹரி ஓம் நமசிவாய ஓம் சுவாகா என்று செபித்து திருநீர் போட யாவுந் தீரும்.

உடல்கட்டு மந்திரம்

ஓம் நமசிவாயவென்று உடலுமுயிரும் ஒக்கக் கட்டினேன், ஓம் பரமசிவாவென்று உச்சியும் உள்ளங் காலையும் கட்டினேன், ஓம் பைரவாயாவென்று பஞ்ச பூதத்தையுங் கட்டினேன், ஓம் அஷ்டபரியென்று எட்டுதிக்கும் பதினறு கோணமும் கட்டினேன், ஓம் சரஹணபவாவென்று சர்வமுங் கார்க்க கட்டினேன், என கட்டு என் குரு சுவாமி கட்டு என்கட்டு முன்பின்னுக நிற்கக்கட்டினேன், சுவாகா. உருவு 1008-செபிக்கச் சித்தியாம்.

கட்டவிழ்க்கு மந்திரம்

ஓம் சிவாயநமா ஸ்ரீ ஓம் குருவேநம சர்வமுங்கட்டு விட்டேன் என்றும் இதை பூரணை அமாவாசை ராத்திரி தலைமுழுகி

இம் மந்திரம் 108-செபித்து பிற்பாடு கட்டுவிட 1-விசை செபிக்கவும். **சகலத்திற்கும் கட்டுமந்திரம்**

ஓம் பகவதி, பைரவி, பரப்பிரம்மஸ்வரூபி, அரேமாயி, அரேகாளி, அரேருத்திரி, என்முன் வரப்பட்ட ஏவல் கிரகங்கள், எதிர்த்த சத்துருக்கள் பில்லி பிசாசு பிரம்மராக்ஷச கணங்களையும் கட்டு கட்டு, ஓட்டு ஓட்டு, சர்வ பிணி தோஷங்களையும், மாறு மாறு சாடு சாடு சர்க்குரு தேவி வசிய ஸ்ரீ சிங் வங் சிவய நம ஓம் ஆம் ஹவும் ஓம் திரிபுரசுந்தரி ஓம் நம: உருவு 108-செபிக்கவும் சித்தியாம்.

திக்குக்கட்டு மந்திரம்

இதற்குப் பூசை கறுப்புக்கோழி, கறுப்பு புஷ்பம், வஸ்து, தூபதீபம், கிரைசாதம், பலியிடவும், மெழுகினல் பதுமை செய்து இச் சக்கரமெழுதி அதின் வயிற்றிலடைத்து உரு செபித்து பகைவன் வீட்டிற் சொருகவும் ஆகிருஷ்ணமாம்.

குட்டிச்சாத்தான் வேலை

ஓம் கூரிய நாக்கும், குறித்த வீரப்பல்லும், மீறிய பார்வையும், மிறங்கிய நெற்றியும், கீறிய வாயும், செம்மயிர் மேனியும், பீறிய காதும், பிறவாய்ப் பல்லும், பிரம்பிட்ட கையும், கார்வாய் பேச்சும், கரித்துணையாடையும், மிறவாய் நாக்கும், மிலங்கொடி யூனும், பிறவாய்த் துன்பமும், புனயேயுநாலும், குறுத்தலை நடுங்கிய குன்றிய சென்னியும், பாலி லட்சணமும், பாறை வீடும், கோழி நாட்டமும், குறைகளினும்முன், தாளிலேநின்ற தரிநகம் பாரே நகம்பார்த்த முண்டை, ரணபாதகத்தி, மூகம் பார்த்த பேர்க்கு, முக்கோடிவித்தை, அகம்பாவஞ் செய்பவள், அறு கொலை மாட்டி, ஜெகச்சாலக்காரி சேதியைக் கேளே கேளே, நீ மன்றிக் கரிக்கொத்த சோறும், மூலைப்பூசலும், முட்டைப் பலியிடு, நாளே தூமைச்சட்டி. நாரையர் மேரையில் சூவேயிருக்குநால், தோத்தரிப்பாலே, தோத்தரிபபாய், நீ துற்சனி மாந்திர நத்துதரிப்பாலே, நதோயிலுகாரிய, மாதரியாலே, செகச்சால செய்கையும், சித்தியு மூத்தவள், சாத்தியமோடியின், தாக்கிட தாக்கிடு, சேனையிற் சத்துரு வீட்டினிற் றாக்கிடு, சில்லரைச் சண்டை முகத்தினுற் றாக்கிவிடு, நல்ல சத்தத் தொழின்முறை தாக்கிடு, தாவணி தரித்த சத்தி காருடனே.

மூலம்-ஆவைக் குட்டிச் சாத்தியம்மை, நீலக்காளி, ஆட்டிடு மூதேவி, எக்கலா காளி, அண்டையிலே காளி, யமைந்திருக்கச் சுவாகா.

ஒரு தனி வீட்டில் குயவன்மண், செக்கடிமண், பாழ் வீட்டின் மண் மூன்றும் பிசைந்து, மாலில் சொன்னபடி பிள்ளையார் செய்துவைத்து தேவாங்கு குடலை மாலைபோட்டு தோலையுரித்துப் பத்திரப்படுத்தி, பூசை நீச்சப் பூசையிட்டு மால் 2-3-திறஞ் செபித்து எட்டு நாளைக்கு மூலம் 108 உருவு செபித்து வரவும், 8-நாளான பிறகு ஒரு சீட்டில் சத்துரு பேர் தலைகீழ்போட்டு அவள் காலடி மண் மலசலம் முன் தேவாங்குதோலில் துறுத்து

கட்டி சத்துரு வீட்டின் புழக்கடை சாக்கடையிற் புதைக்க, யாவரும் காலையில் பத்துமணி வரையில் ஆவேசமாடுவர். மாலை இரண்டு மணி துவக்கி ஆவேசமாடுவர், அதை யெடுத்துவிடவும், நின்றுவிடவும் மறறொருவர்க்குச் செய்ய பிள்ளையார் வேண்டியதில்லை. முன்தோல் அல்லது புதுதோலில் பேர்சீட்டு மண் மலசலம் சேர்த்து கட்டி முன்போல் புதைக்கவும் அங்கேயும் இவ்வாறுகும் உருவங் காட்டாது.

மயானத்தில் 3-குடுவையில் கொஞ்சங் கொஞ்சமாய் அரிசி போட்டு பொங்கி, ஒனறில் கொஞ்சம் மலம், ஒன்றில் கொஞ்சம் கல், ஒன்றில் கொஞ்சம் நெருப்பு மற்றதும் போட்டு ஒன்றின் மேலொன்று வைத்து துடைத்துவிட கல் நெருப்பு மலம் போடும்.

குட்டிச்சாத்தான் சக்கரம்



நரசிங்க மந்திரம்

ஓம் சிங்கமுகவா ஓம் ஓம் கூரப்பல்லும் இருண்ட கண்ணும் அகோர ரூபமும், என்னைக்கண்ட சத்திராதி ஏவல் பில்லி சூனியத்தைக் காளவுக்கிர நரசிங்கா, பல்லால் கடித்து, உதிரத்தைப் பலிகொண்டு பூதப்பிரேதப் பிசாசு பேய் பிரம்ம ராக்ஷச குறளி குட்டிச்சாத்தான் யாவும் பொடிபட்டோட நரசிங்க ராஜா வாணை சுவாகா.

மூல மந்திரம் ஸ்ரீம் கிலீம் யசுவாகா உருவு 1200-செபிக்கச் சித்தியாம் சுத்தப்பூசை.

நரசிங்கச் சக்கரம்

அநுமந்தர் வசியம்

ஓம் ஹரிஹரி ஓம் நமோ அரிராமதூதா, ஆஞ்சநேயா, அதிபல பராக்கிரமசூரா, அண்டரண்ட பகிரண்ட சண்டப்பிரசண்டா, உத்தண்ட கோலாகலா, அகோர சத்துரு சம்மாரா, வாமருள் கிருபாதயாள சிவசிவ யோகாசனப் பிரியா, வாய்வு குமாரகா, சீதாலக்ஷிமீ சுதாசுதா, சாயா பராக்கிரமா விஸ்வரூபா, ஓங்கார ஆங்கார பீங்காரா, சஞ்சீவிராயா, சர்வ மோக்ஷகாரணு, சகஸ்திரநாம வலங்கிருதபூஷணு, பிரம்ம வரப்பிரகாச வஜ்ஜுகூலா, பிரண்டகால ருத்திரா, பக்திவிசுவாசா, சுத்தசுசீகரா, சுகிர்தகுணசீலா, அமூர்த கலேக்கியாணு, பரமாத்மா, பாபவிமோசனு, பம்பாம் ரரர-ரீரீ-நமசிவய-அநுமந்த வசிய சுவாகா.

மூல மந்திரம்-ஓம்-ஆம்-ஊம்-ஐயுங் கிலியும் சவ்வும் வவ்வும் சிங் வங் நமசிவய வசியநம அநுமந்த வசிய சுவாகா. உருவு 1008-செபிக்கச் சித்தியாம்.

அநுமந்தர் வசிய சக்கரம்

இராஜ வசியம்

ஓம்: நாட்டடங்க நமசிவயம் நயனமடங்க நமசிவயம், கோலடங்க நமசிவயம், கொடூரமடங்க நமசிவயம், என்னோடெதிர்த்த சத்திராதிகளையெல்லாம் பல்செத்து, பல்மாண்டு, நாவிழுந்து நாவெழாமலிருக்க சுவாகா. உருவு 1008-செபிக்கச் சித்தியாம்.

இராஜ வசிய சக்கரம்




இந்த சக்கரத்தை விபூதியிலெழுதி நாலு மூலையிலும் கற்பூரம் வைத்துக் கொளுத்திச் செபிக்கவும். எட்டுநாள் ஜெபித்த பிறகு தகட்டில் லெழுதி எதிரி பெயரெழுதியும், வேறே விபூதியில் லெழுதியும் பின்பு ஜெபிக்கவும்.

இதற்குப் பூசை-பால் பழம் அவல் கடலை தேங்காய் தூப தீபம் வெள்ளைப் பூவால் உரு செபிக்கவும். எட்டுநாள் செபித்தால் இந்த நாலு மூலையிலிருக்கும் கற்பூரம் ஒன்றுய்க் கூடினல் சித்தியாச்சுது கூடுகிறவரையில் செபிக்க வேண்டியது.

வசிய மந்திரம்

ஹரி ஓம் ஸ்ரீ ஐயும் கிலியும்
ஹரி ஓம் ஸ்ரீ கிலியும் ஐயும்
ஹரி ஓம் ஸ்ரீ சவ்வும் கிலியும்
ஹரி ஓம் வசிய மோகினி வாவா

வருக வருக சீக்கிரம் வசிவசி வாவா உருவு 128-செபிக்கவும். இதை நாள் ஒன்றுக்கு 128-உருவு 8-நாளைக்குச் செபிக்கவும். பூசை அவல் கடலை பால் பழம் தேங்காய் சர்க்கரை செவப்பலரிப்பூ தாம்பூலம்கூடன்சாம்பிராணி ஊதுவத்திகொளுத்தவும்.

வசிய சக்கரம்



இரண்டு தகட்டில் இந்த சக்கிரத்தை யெழுதி அவளுடைய காலடி மண்ணிலும், தலைமயிராகிலும் வைத்து டனுகுபூசி செபம்செய்து ஒரு தகட்டை இந்த சக்கிரத்தின்நடுவிலிருக்கும் எழுத்து அவள்விட்டுவாசற்படியைப் பார்க்கிறாப்போல் புதைக்கவும். ஒரு தகட்டைக் குளிச்சமாடி வைத்துக்கொள்ளவும் 3-நாளில் வசியமாகும். ஆகாவிட்டால் ஈணுக்கிடாரி சாணியை மாடத்தின் மேற்புறத்தில் அப்பி அதில் இந்தசக்கிரத்தை ஒட்டி வைத்து வேப்பெண்ணெயில் தீபம் எரிக்கவும். இந்த சுடர்முனை சக்கிரத்தின் நடுவெழுத்தில் படவேண்டும். அந்த யிடத்திலிருந்து ஜெபஞ் செய்யவேண்டும்.

பிரிவு உச்சாடனம்

ஓம் ஆம் அவ்வும் ஐயும் ஓம் வீரதூமாபதி உம்படு உச்சாட்டாயா உருவு 20000-ம செபிக்கச் சித்தியாம்.

இச் சக்கிரத்தை பச்சப் பனையோலையில் எழுதி இந்தச் சக்கிரத்தில் எதிரியுடைய பேரை தலைகீழாக மாறி யெழுதவும் அதற்குக் கருவு பூசவும் கருவாவது:—பன்றி மலம், கழுதை மலம், மனிதர் மலம், மண்டையோடு, தீட்டுச்சீலை இவைகளைக் குழித்தைலமிறக்கி சக்கிரத்தின் மேல் பூசவும். எதிரியுடைய காலடி மண் வைக்கவும். செபம் செய்து இந்த சீட்டை அவர்க

ளிருப்பிடத்தில் சொருகவும். பிரிந்து போவார்கள். இதைச் செய்யும்போது ஜாக்கிரதையாய் செய்ய உடல் கட்டு பந்து செய்துகொண்டு செய்யவும், ஐங்காயந் தடவினுலுந் தடவலாம்.

ஐங்காயமாவது ஒருதலைப்பூண்டு, கடுகு, வசம்பு, காயம், வெந்தியம் இவைகளை திட்டுச்சீலை சாராயம் விட்டுக் கசக்கிய தால் சரக்கை யரைக்கவும் அதைப் பூசவும்.

ஜின் மந்திரம்

நங்ரங்-மங்ரங்-யங்ரங்-குவிய குவிய-அகோரஜின்-நமலாட ஜின்-சர்வதுஷ்ட பூதப்பிரேத பிசாசுகளையெல்லாம் சதா கோடி பட் அகோரநசி நவ்வுஞ் சிவாயா-நசி மசி-கண்டாநசி - கட்டா நசி-நம் நசி ஓம்படு சுவாகா. உருவு 100-செபிக்கச் சித்தியாம்.

ஸ்தம்பன மந்திரம்

ஓம் ஆம் ஆம் கிலகில ஸ்தம்பய ஸ்தம்பய சர்வ கிரகங் களும் ஸ்தம்பய ஸ்தம்பய சர்வ தோஷங்களும் ஸ்தம்பய ஸ்தம் பய, சர்வ ரோகங்களும் ஸ்தம்பய ஸ்தம்பய, சர்வ கிரியைகளும் ஸ்தம்பய ஸ்தம்பய, ஓம் ஸ்தம்பய, ரீம் ஸ்தம்பய, கிரியும் ஸ்தம் பய, கிலியும் ஸ்தம்பய, ஆம் ஸ்தம்பய, ஐயும் ஸ்தம்பய ஓம் படு சுவாகா உருவு 1008-செபிக்கச் சித்தியாம்.

சுரமுதித்த நக்ஷத்திரங்கள் 27-க்குரிய பலாபலனும் சந்தியும்

அசுவனி நட்க்ஷத்திரத்திற்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற் றோன்றிய சுரமானது 9-நாளிற்தீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 10-ம் நாளிற் கொல்லும், 3-ங் காலிற்குத்தோன்றிய சுரமானது 15-ம் நாளையி தீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது உடனே மரணஞ் செய்விக்கும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்.

ஆவதோ ரசுவனியி லன்றுதித் திடுஞ்சுரம்
போவதும் பத்துநாளினிற் போகாவிடிற் சாந்திகேள்
ஈவதும் நவதானிய மிங்கவர்தலை சுற்றி
கோவதற்கு வைத்திடக் குணப்படு வரங்கனே.

இ-ள். யாதா மொருவருக்குச் சுரந்தோன்றி அது விடா மற் பிடிக்குங்கால், அச்சுரமானது அசுவனி நக்ஷத்திரமா யிருக்

தில், அப்பொழுது அவை பத்து தினத்தில் விட்டுவிடும் அப்படி விடாது வாதைப்படுத்திடில், அதற்குச் சாந்தி, நவதானியத்தை அந்நோயாளி தலையைச்சுற்றி பசுமாட்டிற்கு வைத்திடவும். அச்சுரம் நின்றுவிடும். எந்த மருந்தும் பிடிக்கும். எ-று.

பரணி நட்க்ஷத்திரத்திற்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற்றோன்றிய சுரமானது 3-நாளையிற் றீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 7-ம் நாளையிற்றீரும், 3-ங் காலிற்குத்தோன்றிய சுரமானது 15-நாளையிற்றீரும். 4 ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 15-நாளையிற் றீரும், அப்படித் தீராவிடின் 16-ம் நாளையிற் றப்பாமற் கொல்லுவிக்கும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

பரணியிற் சுரமுதிக்கப் பாரைந்து நாளில்விடும்
விரைவினில் விடாதகால மெள்ளுஞ் சோர்தலைசுற்றி
நிறைவிடவூர் மேற்கினில் நிலைக்க நாலுசந்தியில்
பாவைத் திடவங்கே பரந்துபோகும் நோயதே.

இ-ள். ஒருவர்க்குச் சுரந்தோன்றியது பரணி நக்ஷத்திரமாயிருந்திடில் அச்சுரமானது ஐந்துநாளில் விட்டுவிடும். அப்படி விடாது பிடிக்குமாகில் அதற்குச் சாந்தி எள்ளுஞ் சோறும் நோயாளி தலையைச் சுற்றிக்கொண்டுபோய் ஊருக்கு மேற்கே நாலு சந்தியில் வைத்துவிட அச்சுரம் அகன்று விடும். எந்த மருந்தைப் பிரயோகித்தாலும் நீங்கிவிடும். எ-று.

கிருத்திகை நக்ஷத்திரத்திற்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற் றோன்றிய சுரமானது 9-நாளையிற் றீரும். 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 50-நாளையிற் றீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 15-நாளையிற் றீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 48-நாளையிற்றீரும், அப்பட்டித்தீராவிடின் அதை நம்பக்கூடாவாம்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

கிருத்திகைச் சுரமூந்தோன்றிற் கேளிருபத் தோர்நாளில்
பொருந்தமாக நிற்பது போகாவிடிலே நெய்யுஞ்சோறு
உருத்தமாகச் சுற்றியே யங்கூரக் கினிமூலையில்
திருத்தமாக வைத்திடவுந் தீருஞ்சுர மங்கனே.

இ-ள். மனிதர்க்கு கிருத்திகை நக்ஷத்திரத்தில் சரந் தோன்றியது இருபத்தோர் நாளில் விட்டுவிடும். அப்படி விடாமல் தொந்தரை செய்திடில் அதற்குச் சாந்தி செய்யுஞ் சோறும் அந் நோயாளியின் தலையைச்சுற்றி அவ்வூருக்கு அக்கினி மூலையில் வைத்துவிட்டு வரவும் அந்தச் சரம் உடனே நின்றுவிடும்.

ரோகணி நட்க்ஷத்திரத்திற்கு

இந்த நக்ஷத்திர முதித்த 1-ங் காலிற்றோன்றிய சுரமானது 10-நாளையிற் தீரும். 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 18-நாளையிற் தீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 48-நாளையிற் தீரும், 4-ங் காலிற்குக் தோன்றிய சுரமானது 85-நாளையிற் தீரும், இதில் வாதை மந்திரம் 5-விதஞ் சப்பவிக்கும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

மந்தமாகும் வாய்பினத்தும் வாந்தி செய்திருமிடும்
சந்தமலமவிடுஞ் சலமிறக்கும் போதினில்
குந்திதொந் தரையாந்தேகங் கொப்பளிக்குங் காய்ந்திடும்
தொந்தவாய்வும் பரியுஞ் சுரிண்டிடுஞ் சொரியுமே.

பார்க்கமார் வயற்றினிற்கும் பாரைபாக் கினுற்போல
கோர்க்கவே கண்டம் பிடரிக்குந் திமிராயேறிடும்
ஏர்க்கவேபதினோர் நாளிலேகிடு மேகாவிடின்
தீர்க்கமாய்ப் பால்சோறுஞ் சுற்றிச் சேருமூர் நடுவிலே.

இ-ள். மானிடர்க்கு சுரந்தோன்றியது ரோகணி நக்ஷத்திரமா யிருக்குமாகில் அதின் குணம் மந்தமாயிருக்கும் வாய் பினத்தும் வாந்தியெடுக்கும், இரும்பும், மலசல மிருக்கையில் வாதைப்படுத்தும் தேகங்கொப்பளிக்கும் காயும், வாய்வுபரியும், சுருண்டுவிழும், சொரியும் மாருக்கும் வயற்றுக்கும் பாரை பாச்சினுப்போலிருக்கும். கண்டத்திறகும் பிடரிக்கும் திமிரேறிடும், அது பதினோர் நாளில் தீரும். அப்படித் தீராதாகில் பால் சோறு பொங்கி அவாள் தலையிற்சுற்றி ஊருக்கு மத்தியில் வைத்துவிட்டு வ வும் அச்சுரம் நீங்கிவிடும். எ-று.

மிருகசீருஷ நக்ஷத்திரத்துக்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 30-நாளிற்கு மேற்றீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுர

மானது 28-நாளையிற் தீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 15-நாளையிற்தீரும், 4-ங்காலிறகுக் தோன்றிய சுரமானது 35-நாளையிற் தீரும், இதில் யாதொரு குறைவுமில்லை.

இதற்குச் சாந்தி பரிகாரம்

மிருகசீரிடச்சுரம்விலகு மாரநாளொன்பதில்
வெருவவேலிற்காவிடில் வெள்ளைப்பூவுளுந்துமே
சிரஞ்சுற்றிப் பெருமாட்கோயில் சேரவுமுன்வைத்திட
மருவலிச்சுரமகன்று மாறியோடும் மாண்பிதே.

இ - ள். ஒருவர்க்குத் தோன்றும் சுரமானது மிருகசீருட நக்ஷத்திரத்தி னுதிக்குமாயின் அவை ஆறுநாள் அல்லது ஒன்பது நாளில் விட்டுவிடும் அப்படி விடாது போனால் அதற்குச் சாந்தி வெள்ளைப் புஷ்பம் உளுந்தும் வைத்து அவாள் தலையைச் சுற்றி பெருமாள் கோயில் முன்வைத்திட அச்சுரமகன்று மாறி விடும்.

திருவாதிரை நக்ஷத்திரத்துக்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற்றோன்றிய சுரமானது 9-நாளையிற்தீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது உடனே மரணத்தை யுண்டுபண்ணும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 10-நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 25-நாளையிற்றீரும், இதனல் யாதொரு பிசகும் நேரிடாது.

இதற்குச் சாந்தி பரிகாரம்

ஆதிரையிற்காண்சுரமு மைந்துநாளையில்விடும்
வாதித்கவிடாதாகில் மரணமிருபத்தைந்தில்
வேதித்துப்புதன்வியாழம் வெள்ளிசனியின்பகல்
ஓதியேபரமான்னமுடையோர் கோயில்முன்வையே.

இ - ள். மற்றொருவர்க்குத் தோன்றுஞ் சுரமானது திருவாதிரை நக்ஷத்திரமாயிருந்திடின். அது ஐந்துநாளில் விடும் ஒரு வேளை வாதித்து விடாதிருக்கில் அவாள் இருபத்தைந்தாம் நாள் மரண மடைவார். அதற்குச் சாந்தி புதன், வியாழம், வெள்ளி, சனி இவ்வாரங்களிலொன்றில் பகல் உச்சி நேரத்தில் மந்திரித்து பரமான்னம் வைத்துத் தலையைச்சுற்றி உடையவர் கோயில்முன் வைத்திட அச்சுரம் நீங்கிவிடும். எ - று.

புனர்பூச நக்ஷத்திரத்திற்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 7-நாளையிற்றீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 10-நாளையிற்றீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 18-நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது உடனே மரணஞ்செய்விக்கும். இதில் முதற்கால் கொன்றுலுங்கொல்லும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

புனர்பூசமுதித்தகாய்ச்சல் போகுமூணுளல்லது
தனித்திருபத்தோர்நாளிற் றூன்விலகிப்போகாதேல்
முனிந்துமே காயமுஞ்சோறுமுன் பெருமாள்கோயிலில்
கனிந்துமேவைக்கச்சுரமுங் காணுதோடுங்கானனே.

இ - ள். வேறொருவர்க்குத் தோன்றிய சுரமானது மூன்று நாளில் அல்லது இருபத்தோர் நாளில் விலகிப்போய்விடும். அப்படியும் போகாவிடின், அதற்குச் சாந்தி பெருங்காயமும் சோறும் அவாள் தலையைச்சுற்றி பெருமாள் கோயிலில் வைத்து விட்டு வரவும். அச் சுரமானவை அப்பொழுதே அவர்களை விட்டு நீங்கிவிடும் எ - று.

பூச நக்ஷத்திரத்துக்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 7-நாளையிற்றீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 12-நாளையிற்றீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 9-நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 27-நாளையிற் றீரும், இதில் தீராதாகில் நவக்கிரக சாந்தியுங் கூட செய்யவும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

பூசத்திலுதித்தசுரம் போகாதேல் பொல்லாங்கிலே
நேசத்திலுதித்தபோதே கெட்டாமலேநின்றிடும்
பாசத்திலுதித்ததற்குப் பாங்கொன்றுஞ் சாந்தியிலே
தேசத்திலுதித்த நோய்க்குச் சேதமில்லாதேகுமே.

இ - ள். இன்னொருவர்க்குத் தோன்றுஞ் சுரமானது பூச நக்ஷத்திலாகில் அது போகாது கெட்டிடினும் பயமில்லை. அவை உதித்தபோதே அங்கே பீடிக்காது தானே அகன்று விடும். அதற்கேற்ற யாதொரு சாந்தி செய்ய வேண்டியது

மில்லை அதினல் அம்மனிதர்க்கு கெடுதியான சேதமானது நேர மாட்டாது. எ - று.

ஆயிலிய நக்ஷத்திற்கு

இந்த நட்சத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 9-நாளையிற்றீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 20-நாளையிற்றீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 90-நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 39-நாளையிற்றீரும் இதை நம்பவுங்கூடாது ஓமம் வளர்த்தவும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

ஆயிலியத்திலுதித்த வச்சுரமுமற்றுநாட்
போயிடாதமூவார்நாட் புகழ்பெறவுநின்றிடுவ
தாயிருந்திடுமெபுத்தின்மேற் றுன்வார்க்கப்பணக்கம்பால்
நோயதுவகன்றிடும் நுணுக்கமான நட்டமே.

இ - ள். யாதாமொருவர்க்குத் தோன்றுஞ் சுரமானது ஆயிலிய நட்சத்திரத்தி லுதிக்குமாகில், அது மற்றுநாளே விட்டுவிடும். அப்படியும் விடாததாகில், அவை பதினெட்டா நாள் நிவறுவிடும். அதற்கு சாந்தி வெள்ளிக்கிழமைதினம பத் திருக்குமிடத்தில் பாணக்கமும் பாலும் வாதது விட்டுவரவும் அச்சுரமகன்றுவிடும். எ - று.

மக நட்சத்திரத்துக்கு

இந்த நட்சத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது உடனே மரணஞ் சம்பவிக்கும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 30-நாளையிற்றீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 85-நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 5-நாளையிற்றீரும், இதில் நவக்கிரகசாந்தியுஞ்செய்யவும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

மகத்தினிலுதித்திடுஞ் சுரமாறுமீறுர்நாளில்
இகத்தினிற்றீருந்தீரா திரண்டுமாதத்தில்விடும்
அகத்தினிலேவெள்ளுஞ் சோறதைச்சுற்றிச் சுட்டலைவை
சகத்தினிலேயச்சுரமுந தாண்டியோடுஞ்சன்னியே.

இ - ள் மாந்தர்க்குச் சனிக்கும் சுரமானது மக நக்ஷத்திரத்தி லுதிக்குமாகில் பனிரண்டாம்நாளில்விடும். அப்படி விடாததாகில் இரண்டு மாதத்தில்விடும். அப்போது சாந்தி எள்ளுஞ்

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS-600 008
102183

சோறுந் தலையைச் சுற்றிக்கொண்டுபோய் சுடலைக் கரையில் வைத்துவிட்டு வரவும் அச்சுரமானவை நீங்கிவிடும். எ - று.

பூர நட்சத்திரத்துக்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலுக்குத் தோன்றிய சுரமானது உடனே மரணத்தை யுண்டுபண்ணும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 25-நாளையிற்றீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 26-நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 81-நாளையிற்றீரும், இதிற் கொஞ்சம் கஷ்டத்தை யுண்டுபண்ணும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

பூரத்திலுதித்தசுரம்போகும் நாட்பதினைன்றில்
பாரதில்விடாததாகில் பருப்புஞ்சோறுஞ்சுற்றியே
சோறதைப்பிடாரிகோயிற் கொண்டுபோய் முன்வைத்திட
சீறதாய்ச்சுரமுந்தீர்ந்து செம்மையாவார் திண்ணமே.

இ - ள். தற்செயலாய் ஒருவர்க்குத் தோன்றுஞ் சுரமானவை பூர நக்ஷத்திரத்திலுதிக்குமாகில் அது பததே நாளில் தீரும், அப்படித்தீராது வாதிக்குமாகில் அதற்குச் சாந்தி பருப்புஞ் சோறும் கொண்டுவந்து அவாள் தலையைச்சுற்றிப் பிடாரியின் கோயில்முன் வைத்திட அச்சுரம் அப்போதே குணப்படும்.

உத்திர நட்சத்திரத்துக்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 8-நாளையிற்றீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 30-நாளையிற்றீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 52-நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது உடனே மரணத்தை யுண்டுபண்ணிவைக்கும் இதில் பெருங்கழிப்பு சாந்தி செய்யவும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

உத்திரத் துதித்தசுர மொன்பது நாளில்விடும்
அத்திரம் விடாதாகி லதற்குத்தேனுஞ் சோறுமே
ருத்திரமாய்ச் சீதேவியார் கோயில்முன் வைத்திட
பத்திரமாகச் சரம்பறந்து போகும் பாரிலே.

இ - ள். திடும்பிரவேசமாய் பிறருக்குத் தோன்றும் சுரமானது உத்திர நக்ஷத்திரத்தி லுதிக்குமாகில், அது ஒன்பது

நாளில் விடும். அப்படி விடாததாகில் அதற்குச் சாந்தி தேனுஞ் சோறும் பிசைந்து அவாள் தலையைச்சுற்றி சிதேவியார் கோயிலின் முன்வைத்திடவும் அச்சுரமானவை அப்போதுநீங்கிவிடும்.

அஸ்த நட்சத்திரத்துக்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 8-நாளையிற்றீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 15-நாளையிற்றீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 28-நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 82-நாளையிற்றீரும், இதில் ஒன்றும் கெடுதியில்லை.

இதற்குச் சாந்தி பரிகாரம்

அத்தத்தி லுதித்தசர மாற்றிடுமேழ் நாளினில்
முத்ததில் விடாததாகில் முன்னமாப் பால்சோறுமே
மொத்தத்திற் றலைச்சுற்றி யூரிற்றுர்க்கை கோயிலில்
வைத்திடச் சுரமுந்தீர்ந்து மாறியோடு மங்கனே.

இ - ள். கடூரமாய் மனிதர்க்குத் தோன்றுஞ் சுரமானது அஸ்த நக்ஷத்திரத்தி லுதிக்குமாயின் அது ஏழு நாளில் விடும். அப்படி விடாது பிடிக்கில் அதற்குச் சாந்தி பாலுஞ் சோறுஞ் சேர்த்துப் பிசைந்து அவாள் தலையைச்சுற்றி ஊரிலுள்ள துர்க்கை கோயில்முன் வைத்திட அச்சுரமானவை உடனே தீர்ந்துவிடும். எ - று.

சித்திரை நட்சத்திரத்துக்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றுஞ் சுரமானது 9-நாளையிற்றீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது பதினைந்து நாளையிற்றீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 12-நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 41-நாளையிற்றீரும், இதுவும் மெத்த பொல்லாது.

இதற்குச் சாந்தி பரிகாரம்

சித்திரையினி லுதித்த சீதச்சுரம் நாளெட்டில்
நீத்திரையினிலே நிற்கும் நிற்காவிடி லங்கனே
வத்திரமுஞ் சோறுகரி வைத்துதலை சுற்றியே
சித்திரமெழுதிய கூடத்தில் வைக்கத் தீருமே.

இ - ள். ஆகாத நாளில் ஒருவர்க்கு சுரமானது சித்திரை நக்ஷத்திரத்தி லுதிக்குமாயின் அது எட்டு நாளில் விட்டுவிடும்,

அப்படி விடாதாகில் அதற்குச் சாந்தி வஸ்திரத்துடன் சோறு கரி வைத்து அவாள் தலையைச்சுற்றி பலவித சித்திரங்களெழுதியுள்ள கூடத்தில் வைத்திட அச்சுரம் அப்போது நீங்கிவிடும்.

சுவாதி நட்சத்திரத்துக்கு

இந்த நட்சத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 12-நாளையிற்றீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது உடனே மரணத்தை யுண்டுபண்ணும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 88-நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 12-நாளையிறறீரும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

சுவாதியிலுதித்தசுரஞ் சோறும்பத்து நாளினில்
அவாவதிற் றீராவிடிலதற்குச் சோறிலைக்கரி
சிவாசியாயத் தலையைச்சுற்றி கெட்டிச்சுடு காட்டினில்
திவாகரனெதிரில் வைக்கத்தீருஞ் சுரஞ்சென்றமே.

இ - ள். அகஸ்மாத்தாய் ஒருவர்க்கு சுரந் தோன்றுவது சுவாதி நக்ஷத்திரத்தி லுதிக்குமாகில், அது பத்து நாளையில் விட்டுவிடும், அப்படி விடாது நீடித்திருக்கில் அதற்குச் சாந்தி சோறும் புண்ணாக்குக் கரி பதார்த்தத்துடன் அவாள் தலையைச் சுற்றிக்கொண்டு போய்ச் சுடுகாட்டில் சூரியன் எதிரில் வைத்துவிட அச்சுரமானது தீரும். எ - று.

விசாக நட்சத்திரத்திற்கு

இந்த நட்சத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 9-நாளையிறறீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 3-நாளையிற்றீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 40-நாளையிற்றீரும் 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 81-நாளையிற்றீரும். இது துன்பத்தை விளைவித்தாலும் விளைவிக்கும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

விசாகத்தி லுதித்தசுரமே யிருபத்தொன்றினில்
பசாசாகவிடும் விடாதேல் பாரிரைச்சிச் சோறுமே
திசா திசையிற் புன்னை மரத்தின்கீழ்வைத்திட
நிசாநிசஞ்சுரமுந்தீர்ந்து கெட்டியோடுங் கானமே.

இ - ள். மரண யோகத்தில் மனிதருக்குச் சுரந்தோன்று வது விசாக நக்ஷத்திரமா யிருக்கில் அது இருபத்தோர் நாளில் தீரும். அப்படித் தீராதாகில் இறைச்சியைக் கரிசமைத்து அதின்கூட சோறும் வைத்து அவாள் தலையைச்சுற்றி புன்னை மரத்தின்கீழ் வைத்துவிட்டு வந்துவிடவும். அச்சுரமானது உட னே அகன்றுவிடும் அதை அவசியஞ் செய்திடவேண்டும் எ-று.

அநுஷ நட்சத்திரத்திற்கு

இந்த நட்சத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுர மானது உடனே மரணத்தை உண்டுபண்ணும். 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 20-நாளையிற்றீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 40-நாளையிற்றீரும்

இதற்குச் சாந்தி பரிகாரம்

அநுஷத்திற சுரந்தோன்றி லதற்கொரு பயமில்லை
மனதிற்கேற்ற சாந்தியொன்று வைப்பதுவு மங்கில்லை
தன்துநாட் கெடுவதுவுஞ் சாற்றுதற்கு வேறில்லை
இனமறிந்தளிக்க மருந்தேகிடும் விரைவிலே.

இ - ள். எவ்வித மனிதற்காகிலும் தோன்றும் பலவித சுரங்களானது அநுஷ நட்சத்திரத்தி லுதிக்குமாயின் அதற்கு யாதொரு பயமில்லை. அதற்கேற்ற சாந்திகளி யாதொன்றும் தனக்கிஷ்டப்படி செய்வதும் ஒன்றுமில்லை. அச்சுரமானது தீரா தென்று கெடுவுவைப்பது வேறொன்றில்லை யாதலால், அதற்குத் தகுந்த மருந்தளிப்பதனால் விரைவில் நீங்கிவிடும். எ - று.

கேட்டை நக்ஷத்திரத்திற்கு

இந்த நட்சத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுர மானது உடனே மரணத்தை யுண்டுபண்ணும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 20-நாளையிற்றீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 31-நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 82-நாளையிற் றீரும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

கேட்டையிலுதித்த சுரங்கேட்க நாட்பதினுறில்
வீட்டைவிட்டேகுமாகா தேல்மிக்க பாலுஞ்சோறுமே
தேட்டையாகக்கேசஞ்சுற்றித் தேடித்தூக்கைகோயில்முன்
போட்டையாகிடிற் சுரம்புரண் டோடுமப்போதே.

இ-ள். சாதாரணமாய் மானிடர்களுக்கு உதிக்குஞ் சுரங்களானது கேட்டை நக்ஷத்திரத்தில் தோன்றுமாயின, அது பதினறு நாளில் தீர்ந்துவிடும். அப்படித் தீராமல் வாதிக்குமாகில் அதற்குச் சாந்தி பாலுஞ்சோறும் பிசைந்து கேசஞ் சுற்றி துர்க்கை கோயிலின் முன்வைத்து விட்டுவரவும், அச் சுரமானது தடையின்றி நீங்கிவிடும். எ-று.

மூல நட்சத்திரத்திற்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற் றோன்றிய சுரமானது உடனே மரணத்தை யுண்டுபண்ணும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 80-நாளிற்றீரும, 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 10-ம் நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 18-நாளையிற் றீரும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

மூலத்திற் சுரமுந்தோன்றிய வோடுநாட் பதினென்றில்
சீலமாய் மீளுமீளாதேல் செல்லுமெட்டு மாதத்திற்
கோலமாய்ப் பயிறுஞ்சோறுங் கொண்டு சமாதியில்வை
ஞாலத்திற் சுரமகன்று நாடாதோடும் நாணியே.

இ-ள். வியாதியின்பேரில் யாதா மொருவருக்குத் தோன்றுஞ் சுரமானவை எப்போதும் மூல நட்சத்திரத்தில் தோன்றுமேயாயின், அது பதினேர் நாளில்விடும், அப்படிவிடாது போராடுமாகில், அதற்குச் சாந்தி பயறுஞ்சோறும் வைத்து அவாள் தலையைச் சுற்றிக்கொண்டுபோய் சமாதியண்டை வைத்திட அச் சுரமகன்றுவிடும். எ-று.

பூராட நட்சத்திரத்திற்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற்றோன்றிய சுரமானது 8-நாளையிற்றீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது உடனே மரணஞ் செய்விக்கும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 10-நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத தோன்றிய சுரமானது 44-நாளையில் சுகுணப்படச் செய்விக்கும.

இதற்குச் சாந்தி பரிகாரம்

பூராடத்துதித்தசுரம் போகுமெட்டாம் நாளினில்
மாராட்டமாகவிடாதேல் மாதவனர்கோயில்முன்

சீராட்டமிடதுபாரி சத்தினின்றுதானமும்
பாராட்டித் தர்மமளிக்கப் பற்றருஞ்சுரமதே.

இ - ள். கொடூரமாய் ஒருவர்க்குதிக்குஞ் சுரமானது பூராட நக்ஷத்திரத்திற் றோன்றுமாகில், அவை எட்டு நாளில் விட்டுவிடும். அப்படி விடாததாகில், அதற்குச் சாந்தியானது பெருமாள்கோயில் முன்னுதாய்நின்று இடதுபாரிசத்திலிருந்து தான தர்மங்களைச் செய்திட அப்போதந்தச் சுரமானது உடனே அகன்று விடும்.

உத்திராட நட்சத்திரத்திற்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 7-நாளையிற்றீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 20-நாளையிற்றீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 40-நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத்தோன்றிய சுரமானது 50-நாளையில் தீரும், இதுவுங் கடினமானவை.

இதற்குச் சாந்தி பரிகாரம்

உத்திராடந்தன்னிலே யுதித்தசுரமங்கனே
தத்திரெண்டுநாளினிற் றணிந்திடுமெளிதினில்
பத்திகொண்டு சாந்திசெய்து பாவிப்பதுமொன்றிலை
சித்தியாகவொத்திடாது தீருஞ்சுரஞ்சென்றுமே.

இ - ள். பகிஷ்காரமாய் பிரஜைகளுக்குத் தோன்றிய சுரமானது உத்திராட நக்ஷத்திரத்தி லுதிக்குமாகில், அது கஷ்டமின்றி இரண்டு நாளையில் நின்றுவிடும், அதற்காக யாதொரு சாந்தி செய்யப்படுவது ஒன்றுமில்லை. அவை கெட்டவும் கெட்டாது. உடனே நின்றுபோய்விடும். அதைப்பற்றி யாதொரு கவலையுங் கூடாது.

திருவோண நட்சத்திரத்திற்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 11-நாளையிற்றீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 14-நாளையிற்றீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது, 3-நாளையிற்றீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது உடனே மரணத்தையும் உண்டுபண்ணும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

ஓணத்திற்சுரமுந்தோன்றி லொன்றுமேபயமில்லை
ஆணவமொடுங்கிநின்ற கன்றிடுஞ்சுரங்களும்
தோணவேறோர் சாந்திகளுஞ் சூட்டுதற்கிலாமலே
காணவேயகன்றது நடுக்கடலிற்புக்குமே.

இ - ள். கண்டிதமாய் நம்போலியர்க்குத் தோன்றுஞ் சுரமானது திருவோண நக்ஷத்திரத்தி லுதிக்குமாயின், அதற்கியா தொன்றும் பயமின்றி அதின் வலிவுகுன்றி உடனே நின்றுவிடும். அவைகட்கொரு சாந்தி செய்யப்படுவதாய் ஏதுவு மில்லையாகையால் நாமொன்றுக்கும் அஞ்சவேண்டிய காரியமே யில்லையாம்.

அவிட்ட நட்சத்திரத்திற்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 9-நாளையில் தீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 15-நாளையில் தீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 61-நாளையில் தீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 39-நாளையில் தீரும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

அவிட்டத்திற் சுரம்வரவகலும் பத்துநாளினில்
தவிர்க்கவேவிடாதாகிற் றயிருஞ்சோறுஞ்சுற்றியே
குவியவுமறையோர்க்குக் கொடுத்திடச்சுரமது
புவிக்குளே விலகியோடும் பொய்பலவீதுண்மையே.

இ - ள். மகிதலத்தில் ஸ்ரீ புருஷர்கட்கு தோன்றுஞ் சுரமானது அவிட்ட நக்ஷத்திரத்தி லுதிக்குமாகில் பத்துநாளில் விட்டுவிடும். அப்படி விடாது வலுத்திடில், அதற்குச் சாந்தி தயிருஞ் சோறும் பிசைந்து அவாள் தலையைச்சுற்றி அந்தணர்கட்குக் கொடுத்துவிடவும் அச்சுரமானது சமுசயமின்றி நின்று போய் ஒழிந்துவிடும். எ - று.

சதைய நட்சத்திரத்திற்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 7-நாளையில் தீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 10-நாளையில் தீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 4-நாளையில்தீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 5-நாளையில் தீரும். இவை துன்பமொன்றுஞ் செய்யாது.

இதற்குச் சாந்தி பரிகாரம்

சதயத்திற்சுரமுதிக்கத் தாண்டிடும் பதினறில்
வதையவேவிடாததாகில் மாரணமோர்ராண்டிலே
உதயத்திற்பஞ்சவர்ணச்சோ ருக்கித்தலையைச்சுற்றி
இதயத்தேற்றியந்தணர்க் கிடச்சுரமகலுமே.

இ-ள். இம் மானிலங்கண் பிரஜைகளுக்குத் தோன்றும் சுரமானது சதய நக்ஷத்திரத்தி லுதிக்குமாயின், அது பதினறு தினத்தில் விட்டுவிடும். அப்படி விடாது எதிர்த்து பீடிக்கில் அவாள் ஒரு வருடத்திற்குள் தப்பாது மரணமடைவர் அதற்குச் சாந்தி உதயத்தில் பஞ்சவர்ணச் சோற்றை அவாள் தலையைச்சுற்றி சூரியனை வணங்கி அதைப் பார்ப்பாருக்குத் தானமளிதது விடவும். அக்கொடிய சுரமானது அகன்றுவிடும்.

பூரட்டாதி நட்சத்திரத்திற்கு

இந்த நக்ஷத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது உடனே மரணத்தை யுண்டுபண்ணும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 14-நாளையில் தீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 81-நாளையில் தீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 41-நாளையில் தீரும்.

இதற்குச் சாந்தி பரிகாரம்

பூரட்டாதியிற்சுரமும் போகுமாறு நாளினில்
ஈரட்டாய்விடாததாகி லீராறுநாளில்விடும் [யில்
ஓரட்டாய்ப்பாலுஞ்சோர்சுற்றி யொக்கப்பிள்ளையார்கோ
மாராட்டமில்லாமல் முன்னம் வைக்கச்சுரமாறுமே.

இ-ள். பூமியினில் பலபேர்களுக்கும் ஜனிக்கப்படாநின்ற சகல சுரமும் பூரட்டாதி நட்சத்திரத்தில் தோன்றுமாகில் அது ஆறுநாளில் விடும். அப்படி விடாதிருக்கில், பனிரெண்டு நாளில் விடும், அதிலும் விடாதாகில் பாலுஞ்சோறும் அவாள் தலையைச் சுற்றி பிள்ளையார் கோயில்முன்னே வைத்துவிட்டு வரவும் அச்சுரம் அப்பொழுதே யகலும்.

உத்திரட்டாதி நட்சத்திரத்திற்கு

இந்த நட்சத்திரமுதித்த 1-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 7-நாளையில் தீரும், 2-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது

17-நாளையில் தீரும், 3ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 7-நாளையில் தீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 28-நாளையில் தீரும் பயமில்லை

இதற்குச் சாந்தி பரிகாரம்

உத்திரட்டாதியிலுதித்த சுரமீரெட்டில்
தத்தியேவிடும்விடாதேல் தயிருஞ்சோறும் சுற்றியே
எத்தியுடையவர்கோயி லேற்றிமுன் வைத்திட
மத்தியிற்சுரமதுவும் வாங்கிப்போமகன்றுமே.

இ-ள். இத்தாணியில் எவ்வித புருஷ ஸ்திரீகளுக்கு உதிக்குஞ் சுரமானது உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பற்றுமாகில், அது பதினாறுநாளில்விடும். அப்படி விடாமற் புரட்டிக்கொண்டு வருமாயின் அதற்குச் சாந்தி தயிருஞ்சோறும் பிசைந்து வைத்து அவாள் தலையைச் சுற்றிக்கொண்டுபோய் உடையவர் கோயில் முன்னம் வைத்துவிட்டு வரவும். அந்தச் சுரமானது தற்செயலாய் விட்டகன்று போய்விடும். எ - று.

ரேவதி நட்சத்திரத்திற்கு

இந்த நட்சத்திரத்திலுதித்த 1-ங் காலுக்குத் தோன்றிய சுரமானது உடனே மரணத்தை யுண்டுபண்ணும், 2-ங் காலுக்கு 11-நாளையில் தீரும், 3-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 18-நாளையில் தீரும், 4-ங் காலிற்குத் தோன்றிய சுரமானது 26-நாளையில் தீரும், இதில் அபிசித்தி நட்சத்திர மென்பதற்கில்லை.

இதற்குச் சாந்தி பரிகாரம்

ரேவதியில்நோசுரமும் நேரிலெட்டுநாளினில்
போவதும்போகாவிடிற் புகழாய்பால் சோறுசுற்றியே
ஈவதுநற்சித்திர மெழுதிய மண்டலத்தில்
ஆயதுமேல் வைத்திட வகலுஞ் சுரமங்கனே.

இ - ள். இவ் வையங்கண் பலபேர்களுக்கும் உதிக்கும் சுரமானது ரேவதி நட்சத்திரமா யிருக்குமாயின் அது எட்டு நாளில் தீரும், அப்படித் தீராது வாதிக்குமாகில் பாலுஞ் சோறும் அவாள் தலையைச் சுற்றிக்கொண்டுபோய் சித்திர மெழுதியுள்ள மண்டலத்தில் அல்லது கூடத்தில் வைத்துவிட்டு வந்துவிடவும். அச் சுரமானதகலும். எ - று.

முருகர் நாற்பத்தி முக்கோண சக்கரம் வசியம்



இதற்கு மந்திரம்

ஓ -ஆம்-ரிங்-சிங் சரவணபவாயா-சண்முக-சுப்பிரமணியா யா சுவாமிநாதாயா - ஸ்ரீ முருகாயா - இரகுநாதாயா - சுவாய நமஸ்து இதற்கு உருவு 1008-செபிக்கவும்.

இதைச் செய்யுங் கிரமம்

இதனை முதல் ஆரம்பிக்கும்பொழுது சஷ்டி திதி அல்லது விசாக நட்சத்திரம் காலையில் சூரியோதயத்திற்கு முன்னே ஸ்நானஞ்செய்து சுத்தி வஸ்திரந்தரித்து தேகத்தில் விபூதி தூளித, மணிந்து கிழக்குமுகமாய் உட்கார்ந்து இச்சக்கரத்தை பஞ்சலோகத் தகட்டில்வரைந்து சோடசோபசாரங்கள் செய்து பால், பழம், தேங்காய், தாம்பூலம், மணமுள்ள புஷ்பம், ஊது

வற்றி, அத்தர், புனுகு, சவ்வாது இவற்றை வைத்து நைவேத்தியஞ் செய்து தன் கையில் உருத்திராட்சமணி அல்லது படிக மணியைக்கொண்டு செபிக்கவும் சித்தியாம்.

அப்படி பூசித்த சக்கரத்தின்மேல் அவாள் காலடிமண்ணை எடுத்து வந்து அச்சக்கரத்தின் மேல்வைத்து மேற்கண்டதின் முதல் மூன்றுநாள் இதேமாதிரியாய்செய்து வருங்கால் 'அவாள் பெயரை அந்த சக்கரத்தின்மேலுள்ள மண்ணில் மாறியெழுதி முன் மந்திரத்தின் கடைசியில் அவாள் பேரைச்சொல்லி என் வசமாகச் சுவாகா என்று எழுதி மெத்தவும் பயபக்தியுடன் ஒருமனதாயிருந்து 108-உருவு செபிக்கவும். பிறகு மேற்படி புனுகு சவ்வாது இரண்டையுங் கூட்டி திலர்த்தமிட்டு அவாள் எதிரில் வரவும் வசியமாவார்.

மோகினி வசிய மந்திரம்

ஓம் நமோ பகவதி, மகாமோகினி, ஓங் நங் நமசிவாயகம. இந்திரன் தந்தநீர், இறைபவன் தந்தநீர், சந்திரன் தந்தநீர், சாமுண்டி தந்தநீர், துர்க்கை தந்தநீர். சூலகபாலி பரமேஸ்வரி தந்த நீர், என்னைவிட்டு எதிரேநின்று, என்முகங்கண்டபேர், எதிரியினிடஞ்சென்று பல்லுருகி, பாதகளஞ் சிதறவுருகி, காமமுருகி, கட்டுருகி, முன்கைதிருகி, முழங்கால்திருகி, சக்கரந் திருகி, சூலந்திருகி, சுடுகாடுதிருகி, சுடுகாட்டிலிருக்கும் உருத்திரிமேல்திருகி, காளி காளாஸ்திரி, எங்கள் திருநீலகண்ட சுவாமிமேலாணை, திருகி முருக்கிக்கொண்டோடிவா, காளி, சாமுண்டி, தக்கன் தலையையறுத்தவளே, கபாலசூலந் தரித்த வளே, சுடலை மோகினி இன்னார்மேல் கொண்டோடிவா சுவாகா.

இதற்கு சுத்தபூசைவைத்து 1008-உருவு செபிக்கச் சித்தியாம் எதிரியின் பேரைச்சொல்லி விபூதியில் அடியில்வருஞ் சக்கரத்தை எழுதி அந்த விபூதியை நெற்றியிலணிந்து தானினைத்தவர் எதிரில் திரிய அவர்கள் உடனே வசியமாவார்கள். இதனால் சகல வசியமும், சர்வ காரியானுகூலமும், நினைத்தபடி முடியும், வழக்குவெல்லும், எதிரி அஞ்சுவான், சத்துருக்கள் மித்துருக்களாவர், சகலமும் ஜெயமாம்.

மோகினிச் சக்கரம்

மஹிடாசூரமர்த்தனி மந்திரம்

ஓம் மாயி மகம்மாரி, மசானகாளி, உத்தம கிருபாகரி, உதிரப் பிணந்தின்னும் உச்சிஷ்டசண்டாளி, என் எதிரி உடலும் உயிரும் ஒக்க உரி உரி, தெரிதெரி, மரி மரி, மசி மசி, சிச்சி மணிமந்திர ஸ்வரூபி, ஓங்காரி, திரிசூலி, ஐயும், கிலியும், மவ்வும், சவ்வும், ஐயும், கிரீம், சிரீம், ஓம் என்று ஓடிவா அவன் அஞ்சு பஞ்ச பூதத்தையும் அடக்கி குடலைப்பிடுங்கிவா பதைக்கபதைக்க துடிக்க துடிக்க, ஒருநொடிக்குள் அகார, உகார, மகார, நகார, சிகார இந்த ஐந்தெழுத்தையும் குத்தி மாறி இழுத்துக்கொண்டோடிவா, அப்படி கொல்லாதே யிருந்தால் கோடிரிஷிகளைக் கொன்ற கொடும்பாவியாவாய், மங்மங், நங்நங், வங்வங், சீக்கிரம் மூணேமுக்கால் நாழிகைக்குள் மாறிவா, வராமற்போனால் துர்க்கை கையிற்கொடுத்து உயிர்தழுவிற் போடுவிப்பேன் உன்னையும் என்னையும் படைத்த ஆதிபரமேஸ்வரன் ஆணைகொண்டோடிவா சுவாகா.

இதன் விபரம்

சிரசில்-சி, நெஞ்சில்-ந, பட்டத்தில்-உ, பக்கத்தில்-எ, எழுதி முதற் பூசை வீட்டில் செய்யவும், மறுபடியும் பூசை அதற்குச் சகலமும் மசானத்தில் செய்து கடைசி பூசை அம்மன் கோவிலில் செய்து மயானத்திற் புதைக்கவும், பால்பூசையாக வைக்கவும், 3-முட்டை, 1-கோழி, காதோலை, கரியமணி, சீப்பு, வளையல், கருப்புத்துணி, கற்பூரம், சாம்பிராணி, ஊதுவத்தி, கதம்பப்பொடி, விபூதியுண்டை, சாதம், புண்ணாக்குக்கீரை, கரு

வாடு, கத்தரிக்காய், தேங்காய், பழம், தாம்பூலம், புஷ்பம், வைத்து நைவேத்தியஞ் செய்யவும், வேளைக்கு உருவு 200 செபிக்கவும் சித்தியாம். இதை மகா பயபக்தி விஸ்வாசத்துடன் செய்யவும். உடல்கட்டு, திக்குபந்து பண்ணவும், பலி தரவேண்டும். இதை முன்னம் 1008-உருவு செபித்து பின்னால் யாதொரு வேலைகளையும் செய்யவும்.

மகிடாசுர மர்த்தனியின் மாரண சக்கரம்



சிதம்பரக்கட்டு

ஓம் அரஅர சிவசிவ வசிகர வசிகர சர்வபூதப்பிரேத பிசாசுகளையும் டாகினி சாகினி மாயினி மோஹினி மற்றுமுள்ள பர துஷ்டதேவதைகளும், வாள்முனி, சடாமுனி, காட்டேரி, உதிரக் காட்டேரி, இரிசிகாட்டேரி, வீரபத்திரனும், பைரவனும், காளியும், மகாகாளியும், சமஸ்தான தேவர்களையும் என்முன்னே வரவொட்டாமல் அங்காளம்மன்தேவி பாதத்தாணை கட்டினேன். இந்திரன் துணை கக்கட்டினேன. ஆம்-ஓம்-றீம்-ஸ்ரீம் என்று சொல்லிக்கட்டினேன். தெற்கே பார்த்தேன் தென்திசையிலே, வந்த காடுகளெங்கும் திரியும் பேய் பிசாசியும் பெருங்

தலைப்பூதமும் கடிக்கும் பாம்பும் பகைவர் பண்டும் நான் விடாமற் கட்டினேன் ஓம் நமோநாராயணவென்று இந்த மந்திரஞ்சொல்லிக் கட்டினேன். ஆச்சிபாதத்தானே கட்டினேன் அரஅர சிவ சிவ, முருகன் துணையாகக்கட்டினேன். மேற்கே பார்த்தேன் மேல்திசையிலே வந்த காடுகளெங்குந்திரியும் பேய் பிசாசியும் பெருந்தலைப்பூதமும் புலியும் பகைவர்பண்டும் கடிக்கும்பாம்பும் சத்துருக்களையும் சிவசிவ சிவன் பாதத்தாணை கட்டினேன். அகார - உகார-எகார-மகார - சிகார-மந்திரஞ்சொல்லிக் கட்டினேன். சூரியன் துணையாகக் கட்டினேன். வடக்கே பார்த்தேன். வடதிசையில் வந்த காடுகளெங்குந்திரியும் பேய் பிசாசியும், பெரும் பூதகணமும், கடிக்கும்-பாம்பும் பாயும் புலியும் பகைவர் பண்டும் நாவெடாமல் கட்டினேன். ஓம்-ஐயும்-கிலியும் சவ்வும் ஐயும் கிலியும்-என்று மந்திரஞ் சொல்லி கட்டினேன் பிரம்மா ஈஸ்வரன் துணையாகக்கட்டினேன். கிழக்கே பார்த்தேன் கீழ் திசையிலே வந்து காடுகளெங்குந்திரியும் பேய் பிசாசையும், பெருந்தலைப்பூதமும், கடிக்கும் பாம்பும், ஆடும் பிசாசியும், ஓடும் சடாமுனியும், வாய்திறவாமற் கட்டினேன, சிவசிவ சிதம்பரம், உன்பாதத்தாணை கட்டினேன், கிலியும் கிலியும், சவ்வும் சவ்வும், ஐயும்ஐயும், ஆம்ஆம், ஓம் என்னும் மந்திரஞ் சொல்லிக் கட்டினேன், மனோன்மணி காவலாகக்கட்டினேன், எட்டு திசையும்-பதினாறுகோணமும் இருபத்தினாலுபுவனமும அதல-விதல-சுதல-தராதல-மகாதல - பாதாளலோகமும் அதிர்ந்திடக் கட்டு கையோடாமல் காலோடாமல் என் மந்திரஞ் சொல்லிக் கட்டினேன், எங்கும் ஓடாமற் கட்டினேன் யம் நம் ஜம் என்று சொல்லிக் கட்டினேன், பிரம்மா ருத்திரன் பாதத்தாணை கட்டினேன், ராமர் காவலாகக் கட்டினேன்-ஓம்-ஐயும்-கிலியும்-சவ்வும் றீயும், கிரியும் ஸ்ரீயும், அரஅர அரிஅரி மூன்று கண் படைத்தவனே என்னையனே, நமசிவய, மசிவயந, சிவயநம, வயநமசி, யநமசிவ, ஓம் படுபடு சுவாகா.

சிதம்பரச் சக்கரம்



இந்த எண் கோணத்துள் அறுகோணம் நடுவில் சத்துருவின் பேர் மாறி விபூதியில் போடவும்.

சிதம்பர உச்சாடனம்

ஓம் ஆம்ஆம்-சிரராசிரரா-யெறியெறி-அற அற-நசிநசி சிவாய உச்சாடணாயா - உச்சாடணாயா - மாரணாயாமாரணாயா - சங்கையாக்ஷி-சடாமுனி அகோர அகோ-அகோராக்ஷணி-ஓம் காலாக்கினி - சிவசிவ சிதம்பரம் - அவ்வும் அவ்வும் அகார உகார மகார விந்துநாத பரப்பிரம்மமூர்த்தி ஆணை ஓம் நமஸ்து.

சிதம்பர உச்சாடன சக்கரம்

சி	வ	ய	ந	ம
ம	சி	வ	ய	ந
ந	ம	சி	வ	ய
ய	ந	ம	சி	வ
வ	ய	ந	ம	சி

பாலக்கிரக தோஷசாந்தி

முதல் நாள்-முதல் மாதம்-முதல் வருஷம்

காளியென்னும் பேயணுகும், அதின்குணம்-உடலை வெதுப்பும், பயமிரளப்பண்ணும், வயிறுகழியும், கண்கள் கவுலெடுக்கும், இதற்கு சாந்தி-பொரிமாவால் பாவைபண்ணி, சந்தனந் தெளித்து எருக்கம்பூ சூடி-மாலைப்பொழுதில் குழந்தையைத் தாயார் மடியில்வைத்து அப்பாவைக்கு வைக்கவேண்டியதை ஓட்டிலிட்டு அதில் 9-துட்டுகூடவைத்து கோழிபலிகொடுத்து குழந்தை தலையைசுற்றி ஏற்றி இறக்கிக்கொண்டுபோய் ஊருக்கு வடக்கே வைக்கவும். இந்த எந்திரம் எழுதிக்கட்டவும்.

2-ம் நாள், 2-ம் மாதம், 2-ம் வருஷம்.

இலாகியென்னும்பேயணுகும், அதின்குணம் உடல்வெடிக்கும், வியர்வையுண்டாகும், குடித்தபாலெடுக்கும், சீறியழும், உடம்பு சிவந்திருக்கும், பூனைகுரல் பட்டழும். இதற்குச்சாந்தி மாவால் பாவைசெய்து செம்பருத்திப் பூச்சூடி, ஐந்துவர்ணச் சோறுடன் 8-அப்பம் 9-துக்காணி ஒரு புதுவோட்டில் வைத்து குழந்தையைத் தாயார் மடியில் வைத்து இன்னும் வைக்க வேண்டியதையும் வைத்து கோழி பலிகொடுத்து தலையைச்சுற்றி ஏற்றி இறக்கிக்கொண்டுபோய் பிடாரிகோவில் சந்தில் வைக்கவும் இந்த எந்திரம் எழுதிக்கட்டவும்.



2-ம் மாதச் சக்கரம்

ஹிலெ

3-ம் நாள், 3-ம் மாதம், 3-ம் வருஷம்

பண்டசகியென்னும் பேயணுகும், அதின்குணம் - வயிறு கழியும், கண்விழிக்காது, கண்குழிவிழும், கண்சுழட்டும், பல்லைக் கடிக்கும், தலைப்புறட்டும், முலையுண்ணாது, இதற்குச்சாந்தி ஐந்துவர்ணசோறும் பணியாரமும், 3-பாக்கும், 5-வெற்றிலை, 9-துட்டு, பாவைசெய்து பஞ்சவர்ணப் பூச்சூடி ஓட்டில்வைத்து குழந்தையை தாயார் மடியில்வைத்து கோழி பலிகொடுத்து தலையைச் சுற்றி ஏற்றி இறக்கி ஊருக்கு வடக்கே ஆலையடியில் வைக்கவும் பிள்ளையாருக்குப் பொங்கலிடவும், இந்த எந்திரம் எழுதிக் கட்டவும்.

ஹிலெ

ஹிலெ

4-ம் நாள், 4-ம் மாதம், 4-ம் வருஷம்

காலாக்கினி யென்னும் பேயணுகும், அதின் குணம்-விடா தழும், தலைபிறட்டிக் கொண்டிருக்கும், வெதும்பும், பல்லைக் கடிக்கும், முலையுண்ணாது, கழுத்து முறப்பாயிருக்கும், விக்க லெடுக்கும், மாவுபோலக்கழியும, முடுக்காய் வலிக்கும், இதற் குச் சாந்தி-மாவாலேப் பாவைசெய்து பலதினுசு பூசூடி ஓட்டிற் வைத்து உளுத்தஞ்சோறும் வேர்க்கடலையும் பொரியும் சாந்து சந்தனமும் புனுகு மதுமாமிசம், 9-துட்டும், சத்தியும்வைத்து, குழந்தையைத் தாயார் மடியில்வைத்து, கோழி பலிகொடுத்து, தலையைச்சுற்றி, ஏற்றி இறக்கி ஊருக்குக்கிழக்கே வைக்கவும். இந்த எந்திரம எழுதிக் கட்டவும்.

ஹிலெ

ஹிலெ

5-ம் நாள், 5-ம் மாதம், 5-ம் வருஷம்

பகாதிரி யென்னும் பேயணுகும, உடம்பு வெதும்பும், பல வர்ணமாய்க்கழியும், காலுங்கையும் முருக்காய் வலிக்கும், மாவு போலக்கழியும், தூங்குகிறுப்போல் பார்க்கும் மிரளவிழிக்கும்

முலையுண்ணாது, இதற்குச் சாந்தி-பருப்புசோறும், கருப்பக் கட்டியும், வாழைப்பழம், ரொட்டி, புண்ணாக்குக்கீரை, கருவாடு, வஸ்திரம், 9-தட்டு, பாவை யாவும் ஓட்டில்வைத்து குழந்தையை தாய் மடியில் வைத்து கோழி பலிகொடுத்து தலையைச் சுற்றி ஏற்றி இறக்கி நாற்சந்தியில் வைக்கவும் இந்த எந்திரம் எழுதிக் கட்டவும்.

ஷுபவ

ஷுபவ

6-ம் நாள், 6-ம் மாதம், 6-ம் வருஷம்

காளுசத்தி யென்னும் பேயனுகும், அதின் குணம் வயிறு சிவக்கக் கழியும், மூக்கு உயர்ந்திருக்கும், பல்லு நெறியும், வியர்க்கும முலைப் பால் நாறும், முலையுண்ணாது, கழுத்து துவண்டிருக்கும், பல்லைக்கடிக்கும், பலவிதஞ் செய்யும், இதற்குசாந்தி-பாவைசெய்து, வெறுஞ்சோறும், கருவாடும், பொரி, சந்தனம், 9-துட்டும், புது வோட்டிலிட்டு, குழந்தையைத் தாயார் மடியில் வைத்து கோழி பலிகொடுத்து தலைபைச்சுற்றி ஏற்றி இறக்கி ஊருக்குக் கிழக்கே புத்தடியில் வைக்கவும், சந்தியில் பிள்ளையாருக்கு விளக்கு வைக்கவும். இந்த எந்திரம் எழுதிக்கட்டவும்.

ஷுபசு

ஷுபவ

7-ம் நாள், 7-ம் மாதம், 7-ம் வருஷம்

சாமுண்டி யென்னும் பேயனுகும், அதின்குணம், வெதும்பும் கண்களில் தண்ணீரொழுகும், குடித்த பாலெடுக்கும், முருக்கும், முலையதிக முண்ணாது, உடம்பு பச்சை நிறமாயிருக்கும், பலவித விகாரம் பண்ணும், கண்கள் நிமை விபறகும் கண்கள் மேல் நெற்றி சுழிக்கும், அழும், பால் குடியாது. இதற்குச் சாந்தி-பாவைசெய்து பலவித பூசூடி, பாலுஞ்சோறும், பணியாரமும், பனவெட்டும், ஐந்துவர்ணச்சோறும், 9-துட்டும் வைத்து மாலைநேரத்தில் குழந்தையைத் தாயார் மடியில்வைத்து, கோழி பலிகொடுத்து, தலையைச்சுற்றி, ஏறறி இறக்கி பிள்ளையார் சந்நிதியண்டை வைக்கவும்.

ஷுபவ

ஹ்லீவ

8-ம் நாள், 8-ம் மாதம், 8-ம் வருஷம்

பாரசத்தி யென்னும் பேயணுகும், அதின் குணம் வெதும்பும் வியர்வை காணும், கண் விழிக்காது, காலும் கையும், அசக்கும், பாலெடுக்கும், முகத்தைத் துடைக்கும், விடாமலழும், இதற்குச் சாந்தி பாவைசெய்து, ஐந்து திஙுசு பூசுடி, மஞ்சள் சோறும், கருவாடும், கோழிமுட்டை-3, சாந்து, சந்தனம், 9 தட்டு, புது வோட்டிலிட்டு யாவும் அதில் வைத்து, குழந்தையைத் தாயார் மடியில் வைத்து கோழி பலிகொடுத்து, தலையைச் சுற்றி ஏற்றி இறக்கி ஊருக்கு வடக்கே வைக்கவும். பிள்ளையார் கோயிலில் ஐயனர் பூசைசெய்து ரொட்டி-5, சத்தி, மது, மாமிசம் வைத்து, இந்த எந்திரம் எழுதிக்கட்டவும்.

ஹ்லீவ

9-ம் நாள், 9-ம் மாதம், 9-ம் வருஷம்

சத்தியமாசி யென்னும் பேயணுகும். அதின் குணம், வெதும்பும், இரத்தமாய்க்கழியும், வயிறுவலிக்கும், குடித்தபாலெடுக்கும், முகத்தைத்துடைக்கும், இருப்பும், இதற்குச்சாந்தி பாவைசெய்து புஷ்பஞ்சூட்டி ஐந்துவர்ணச்சோறும், 5-ரொட்டியும், 5-பணியாரமும், 9-தட்டும் பாக்கு வெற்றிலை புதுவோட்டில் வைத்து மாலைநேரத்தில் குழந்தையைத் தாயார் மடியில் வைத்து கோழி பலிகொடுத்து ஆலமரத்தடியில் வைக்கவும் ஐயனருக்குப பூசைசெய்யவும் புனுகு சந்தனம் வைக்கவும் இந்த எந்திரம் எழுதிக்கட்டவும் உடனே மூன்றெண்ணெய் கூட்டித் தலைக்குவார்க்கவும்.

ஹ்லீவ

10-ம் நாள், 10-ம் மாதம், 10-ம் வருஷம்

கலவையென்னும் பேயணுகும், அதின்குணம், வெதுப்பும், உடம்புவியற்கும், குடித்தபாலெடுக்கும், அயர்ந்துகிடக்கும், வயிறு பிரியும், மார்புவாடும், பால்போல்கழியும், கால்கையுந் தூக்கி முறப்பாய் வலிக்கும், பலவிகாரங்கள் செய்யும், இதற்குச் சாந்தி பாவைசெய்து பூசுடி, பாலுடன் சோறும், செய்யும் புது

ஓட்டில் வைத்து குழந்தையைத் தாயார்மடியில் வைத்து கோழி பலிகொடுத்து ஊருக்கு வடக்கே வைக்கையில் கோழி பலி கொடுத்து 9-தட்டு வைத்துவைக்கவும் சுத்தி ரொட்டிமாவும் வைத்து இந்த எந்திரம் எழுதிக்கட்டவும்.



11-ம் நாள், 11-ம் மாதம், 11-ம் வருஷம்

சத்தியென்னும் பேயணுகும், அதின்குணம், உதடு நேர்ந் திருக்கும். இரவில் காய்ச்சலடிக்கும், மேல்மூச்சுவாங்கும், விகாரமான பார்வை பார்க்கும். ஒருவேளை மூர்ச்சையாய்விடும், இதற்குச்சாந்தி மண்ணால் பதுமை செய்து ஆலடியில் வைத்து விட்டு, நீலவஸ்திரங்கட்டி ஐந்துவர்ணச்சோறும், பொரியும், வாழைப்பழமும்-எலுமிச்சப்பழம், வெல்லம், மதுமாமிசம், 9-தட்டு புதுஓட்டில் வைத்து குழந்தையைத் தாயார் மடியில் வைத்து கோழி பலிகொடுத்து தலையைச்சுற்றி எற்றி இரக்கி ஊருக்கு வடக்கே வைக்கவும் இந்த எந்திரம் எழுதிக்கட்டவும்.

ஹூபஉ

12-ம் நாள், 12-ம் மாதம், 12-ம் வருஷம்

இரதசத்தியென்னும் பேயணுகும், அதின்குணம் வாந்தி பண்ணும், வெளுப்பாய்கழியும், விகாரபார்வை பார்க்கும், கண் கள் குழிவிழும், சீறிசீறியழுகும். இதற்குச் சாந்தி மணலிற் பதுமை செய்து ஆலடியில்வைத்து வெள்ளைத் துணியுடுத்தி, பருப்புஞ்சோறும் பாயசமும கோழிமுட்டை மாவிளக்கு மது

மாமிசம், ரொட்டி வஸ்து சுத்தி 9-தட்டு அவல்கடலை சுருட்டு, வடை யாவும் ஓட்டிவிட்டு குழந்தையைத் தாயார் மடியில் வைத்து தலையைச்சுற்றி ஏற்றி இறக்கி ஊருக்குவடக்கே வைத்து விடவும். இந்த எந்திரம் எழுதிக்கட்டவும்.



பாலகிரக தோஷ சாந்தி முற்றிற்று.

இந்த பாலக்கிரக தோஷங்கட்குச் சாந்தி அல்லது கழிப்பு செய்யவேண்டிய கிரமமாவது முதலிற் தீபம்வைத்து சாணி பிள்ளையாருக்கு அறுகுசூடி, புஷ்பம்-தாம்பூலம் - அவல்கடலை, பழம், தேங்காய், சாமபிராணி, கற்பூரம், ஊதுவற்றி, கஞ்சா-மாஜினம், 32-காசுகளைவைத்து மாவினால் ஆண்பாவை பெண் பாவைசெய்து கண்களுக்கு மைபொட்டிட்டு வாயிற் கொஞ்சம் குங்குமந்தூவி புதுசட்டியில்வைத்து காதோலை கரியமணி வளையல் கதம்பப்பொடி பொரிதூவி மாவிளக்குமேற்றி, தரையில் மேற்கண்ட சக்கரமெழுதி அதில் தாயார் மடியில் குழந்தை வைக்குந்தவைத்து பூசை நைவேத்தியஞ்செய்து தக்க மந்திரஞ் செபித்து வேறே ஐந்துவர்ணச்சோறு, பஞ்சவர்ணப்பூ புண்ணாக்குக்கீரை கள்ளு கருவாடு சாராயங் கரிரொட்டி, 5-உண்டை வடை, சுண்டல், பொரி, யாவும் வைத்து, எலுமிச்சம்பழம் 9, ஆத்துமட்டிக்காய் அல்லது ஊமத்தங்காய் 9 அறுத்து முட்டை 3-வைத்து பாவைமேல் காசுகளைத்தூவி கோழிபலியிட்டு, குழந்தை தலையைச்சுற்றி ஏற்றி இறக்கிக்கொண்டுபோய் வைக்க வேண்டிய விடத்தில் வைத்துவிட்டு அந்த நாள்களுக்குரிய சக்க

ரங்களை செம்பு அல்லது வெள்ளித்தகட்டில்வரைந்து முன்னமே கட்டிவிட்டு, மறுநாள் மூன்றெண்ணெய்கூட்டி தலைக்கு வார்க்கவும் சர்வ தோஷங்களுந்தீரும். இதற்குக்குறி உச்சியில் பள்ளம் விழும் அதிலும் நிவர்த்தியாகாவிடின் பின்னும் இரண்டொரு கழுப்பு இவ்வாறே செய்யவும் வேறொரு யந்திரம் எழுதிக் கட்டவும்.

சகல தோஷங்கட்கும் ஒரே இயந்திரம்



இந்த இயந்திரத்தினால் சகல தோஷங்களும், சர்வ கிரகங்கள் விலகும், கர்ப்பங்கள் தரிக்கும் வழக்குகள் வெல்லும். நினைத்த காரியங்கள் பலிக்கும், ஆனால் இதை அரசு வேளையில் செய்து முடிக்கவும்.

மெஸ்மெரிஸ பராக்கிரமம்.

ஜீவாதார மந்திரோபதேசம்

I can & நான், Will, என்னால்கூடும், நான் செய்வேன்.

இதன் தாத்பரியம்

நான் என்பதற்கு நான நானே என சரீர மனோசக்திகள் யாவையும் கடவுள் ஓத்தாசையால் ஆண்டு நடத்துவது யாவும் நானே.

என்னால் கூடும், நான் செய்வேன் என்பதற்கு கடவுள் எனக்கு அபாரசக்தியைக் கொடுத்திருப்பதால் நினைத்ததை முடிக்கும் வல்லமை எனக்குண்டு, என்னால் கூடாதொன்று மில்லை நான் யாவுஞ் செய்வேன், நானே எல்லாஞ் செய்வேன், என்னால் சகலமும் முடிக்கக்கூடும், ஓ! என் சக்தி அபாரசக்தி, நான் நினைத்தகாரியம் எவ்விதத்திலுங்கூடும், தெய்வம் எனனில் நான் அவரில் அண்ட சராசரங்களிலுள்ள சக்திகளின் சத்து எனக்குள் பாய்ந்து பலன் தருவதால் என்னால் யாவுங்கூடும், நான் எல்லாஞ் செய்வேன்.

இதைச் செபிப்பதின பலன்

ஒவ்வொருவரும் ஒரு மாதம் 30 நாளைக்குத்தான் காலையில் எழுந்திருந்தவுடனும், இராத்திரியில் நித்திரைசெய்யத் தொடங்கு வதற்கு முன்னம் அதன் முதல்வரியிற் செப்பிய மகா மந்திர மென்னும் ஜீவாதார மந்திரோபதேசத்தைப் பலமுறை யுச்சரித்து அல்லது செபித்துத் தியானிப்பவர்களுக்குச் சுகபோக செல்வ பாக்கியம் சதா விசேஷமாய்ப் பெருகும். தாங்கள் நினைத்த காரியங்களும் அநுகூலமாய்க் கைகூடும். இதிற் சகல சித்திகளையும் பெறுவரென்பதுண்மையே

முக்கிய குறிப்பு

இந்த மந்திரத்தை ஒரு தனியிடத்திலிருந்து உச்சாடணஞ் செய்யும்பொழுததான் இரு புருவங்களுக்கும் மத்தியிலுள்ள நெற்றிக்கண்ணில் தன் மனதை யூன்றி சுவாசத்தை வெளி

விடாமல் உள்ளடக்கி மனதைச் சிதறவிடாமல் செபிக்க அல்லது தியானிக்கவேண்டும். அப்படிச் தியானித்துக்கொண்டிருக்கும் பொழுதே அபாரசக்தி உமக்குள் உண்டாவதை உணர்வீர். தமது சரீரம் நிமிர்ந்திருக்கிறதோடு புயங்களிரண்டும் பின்னுகவும் நெஞ்சு முன்னுகவும் கண்களிரண்டும் ஓரே நிலேயிலும் நிறைதைக் காண்பீர். அப்போது நீர் ஓர் உன்னதசக்தி யென்னும் பராக்கிரமம்! உமக்குள்ளிருந்த வல்லமையின் மகத்துவத்தை நீர் எப்பொழுதாவது சிந்தித்ததுண்டா? அந்தக்ஷணமே உமக்குள் உண்டாயிருக்கும் மாறுதலேயுங் காண்பீர். அன்று முதல் நீர் வேறு மனிதன். நீர் எங்கே சென்றாலும், யாரிடம் பேசினுலும் எந்த விஷயத்தைச் செய்தாலும் நான் எல்லாஞ் செய்வேன், என்னுல் யாவுங்கூடும் என்பதை அந்த மாதமுழுதும் அல்லது முப்பத் தினமும் இதை தம் மனதில் வைத்து தியானிக்கச் சகலமுஞ் சித்தியாய் யாவுங்கூடும்.

சத்யமேவ ஜயதே தாந்ருதம்-ஓம்தத்ஸத்

இந்த ஜீவாதார மந்திரோபதேசத்தைச் செபிக்குங்கால், இதற்கோர் தெய்வம் தேவாதி, பூசைபுஷ்பம், ஜெபம்தபம், காவு பலி, நாள் கெடுவு முதலியதன்றி நிரேதுவாய் நினைத்த போது மேற்கூறியபடி தியானித்து வருபவர்களுக்கு முக்கியம் நிர்மலமா மனம். நன்னெறிய கவனம், கண்ணிமையாவிழி, சொன்னயவருண்மொழி இந்நாற்குணமும் பொருந்தி யிருப்பாராயின், அவர்களுக்கு 1-தேசாரோக்கியம், 2-திடசித்தம், 3-மனேசக்தி, 4-துரியதரிசனம், 5-தூரதிருஷ்டி, 6-பிறர்மன வாராய்ச்சி, 7-மனதந்தி, 8-சர்வசித்தி, 9-சுவாக்கியம், 10-பல விஷய காக்ஷியாகிய இப்பத்தும் அமைவதிற் சந்தேகமில்லை. இதில் சகல நோய்களேயும் மருந்து பத்திய பரிகாரமின்றி எளிதில் நீக்கப்படும்.

சுகர்கைவல்யம் மகாவாக்கியம்.

உலகமுதற்பொருளேயும்சர்க் குணவரிதாம்பொருளே
ஓதியநால்வேதாக மத்தினுட்பொருளே
பலகலேயின்பொருள்முடிவின் முடிவானபொருளே
பற்றற்றபற்றிபெரியோர் பரகதியின் வான்பொருளே

அலைதிவரை நுரைகடலி லுதித்தொடுங்குமாபோல்
அகிலாண்ட முதித்தொடுங்கு மதின்மூலப்பொருளை
இலகியசர்க்குருவாகி யானுரும்பொருளை
யெங்குமாம்பரம்பொருளை யாமும்வணங்குதுமே.

என்பாராய் என்னும் ஒருவனை எந்தப் பார்வையும் வசிகரிக்க மாட்டாது; எந்த சக்தியும் மயக்கமாட்டாது; எந்த சித்திகளும் சிதைக்கமாட்டாது, சித்திகளியாவும் அவன் முன்னின்று பணிசெய்யும் அவன் ஒன்றைச் செய்ய வேண்டியதில்லை அவனுடைய தவநிலை மகத்துவத்தால் பல சித்துகளும் வெற்றி பெறும், அதாவது பேய்பிடித்தவர்கள் அவர் முன்வர அப்பேய்கள் அலறிகூவி ஓட்டமெடுக்கும், நோயாளிகள்வர பல நோய்களும் பற்றறுந்துவிடும் புலி சிங்கம் கரடி முதலிய பல மிருகாதிகள்வர அவைகள் தன் மிருகத்தன்மைமாறி அவரை நேசித்து விசுவாசிக்கும் செத்த பிணத்தைக் கொண்டுவரின் பிரிந்துவிட்டவுயிர் மீண்டும் வந்துதிக்கும் எனவுணர்க ஈதன்றி பாபிகள் வந்து தரிசிக்கில் புண்ணியராவர், விலைமகட் குரியோர்காணில் குலமகளாவர்; இதில் இன்னும் பலவித கிரியைகளும் வந்தேறுவதுடன் அஷ்டமசித்திகளையும் பெறுவர் என்பதாம்.

இதன் தாத்பரியம்

நான் ஆன்மா-நான் அறிவு-பான சத்தியபதார்த்தம்
யான்அது சிவன்நான் சிவலோகம் என்னையான் அறிவேன்
என்னையான்பெற்றேன்-யானேயான்-யாவும்நான்.

பிரதமத்தில் உலகமுதற் பொருளையென்றெடுத்து யானுரும் பொருளையெனச் சுட்டிக்காட்டிய தன்மையினுன், யான் என்பது நான் என்னும் பொருளாகுமல்லவா? அப்படி நான் என்பதை அற்று விடுங்கால், தான் யாதொன்றிலும் பிரவேசிக்காமலும், தான் ஒன்றைச்செய்து முடிக்கக் கூடாதவனுமல்லவா ஆகின்றது? ஆனதைப்பற்றி மூதுணர்ந்தோர்கள் யாதினும் நான் எனவாராத நிர்கின்னேர். அவ்வாறு நான் என நவிலாது தன்னை இழிவுபடுத்தி நாய் எனல் நான் எனக் குறிக்கப்பட்டதோ? அத்தகையோர் நாய் என்பதிலும் நான் எனும் அகங்காரமும் எனதெனும் மமகாரமும் தன்னை யென்னவிட்டு

நீங்கிற்றே? ஆதலால் மற்றம் சில பெரியோர் நான் எனவும் நாய் எனவும் இரண்டையுஞ் சொல்லாது மவுனத்திருக்கின்றனர். அம் மவுனயோகிகளும் நான் எனதில்லாமலா மவுன சாதனத்திலிருக்கின்றனர்? அதற்கிணங்க இம் மெய்மெரிய பராக்கிரமத்துள் நான்என வாராவிடின், எவ்வித பராக்கிரமும் புரிய வியலாதாகின்றது. இது வேதாந்த சாஸ்திரத்திற்கு மாத்திரம் விரோதமாயிருக்கின்றதெனினும், கைவல்லியம், ஞான வாசிட்டம்முதலிய மற்றுமுள்ள நூல்களிலும் பல விஷயங்களில் நான் என்பதைநீக்கி நாய்என எடுத்துரைப்பது நன்றே? ஆயினும் இதென்ன அத்வைதமா? அல்லது மெஞ்ஞானமா? அப்படியு மல்லவே எனவறிக.

பாவனு சக்தி

நாம் யாது பாவித்திடினும் அவைகள் புதுவாய்விடுதல் கூடும். தன்னை யொருவன் நாயாகவாகிலும் குரங்காகவாகிலும் புலியாகவாகிலும் சிங்கமாகவாகிலும் இன்னும் எதை எப்படிப் பாவிக்கிறுனே அவைகளைப்போல அப்படியே யாவரன்

அன்றியும் நம் மனதிற்கு இந்த காக்ஷிகளுண்டு, நாம் வீரனது கதைகளைப் படிப்போமாகில் நமக்குள் அவ்வீரமுண்டாகும், பயங்காளிகளது விஷயத்தைப்பற்றிப் பேசுவோமாகில் அப்பயமே நமக்குண்டாகும், சந்தோஷகரமான சரித்திரத்தைக் கேட்போமாகில் நமக்கும் அச்சந்தோஷமுண்டாகும், துக்க சாகரமான சவிஸ்தாரத்தைப் பேசுவோமாகில் நமக்கும் அத்துக்கமுண்டாகும் என்பதற் கிஞ்சிற்றுஞ் சந்தேகமில்லை.

இன்னும் இதிற் கஞ்சா அடிப்பவர்கள் அல்லது அபினி தின்பவர்களில் அனேகர் அடிக்கடி தாங்கள் ஸ்ரீகைலாயம், வைகுந்தம், பிரமலோகம், இயமலோகம், முதலியதில் எதைக் கருதுகிறார்களோ அதைப்போய் கண்டுவருவதாய்ச் சொல்ல நாம் கேட்டிருக்கிறோமல்லவா? அதைப்போல் ஒருவன் ஸ்ரீநடராஜப் பெருமானை மானசபூசை செய்துவருவதில் ஓர் நாள்தான் ஸ்ரீநடராஜனுகவே தன்னை எண்ணியவனுய் ஆனந்த நர்த்தனஞ் செய்து காட்டினுலும் அதற்குத் தடையென்ன? நாம் யாது பாவித்திடினும் தான் அதுவாத லுண்மையாம்.

இஃதப்படியிருக்க தான் டாபத்தைப் பாவிக்கிற் பாபமாயும், புண்ணியத்தைப் பாவிக்கிற் புண்ணியமாயும், தீரத்தைப்

பாவிக்கிற் தீரமாயும், வீரத்தைப் பாவிக்கில் வீரமாயும், அழகைப் பாவிக்கில் அழகாயும் ஆரோக்கியத்தைப் பாவிக்கில் ஆரோக்கியமாயும், சக்தியைப் பாவிக்கில் சக்தியாயும், சித்தியைப் பாவிக்கில் சித்தியாயும், செல்வத்தைப் பாவிக்கில் செல்வமாயும், கல்வியைப் பாவிக்கில் கல்வியாயும், க்ஷேமத்தைப் பாவிக்கில் க்ஷேமமாயும், க்ஷாமத்தைப்பாவிக்கில் க்ஷாமமாயும், அந்தப்படியே ஆவதுண்மை இது பிசகிராது.

அதில் எப்படி ஒன்றை நாம் பாவிக்கிறுமோ அப்படியே அது நமக்குச் சித்திக்கும், இஃதிப்படியிருக்க அழகை நாம் எவ்வண்ணமாய் பாவிக்கிறது? எனக்கு அழகு உண்டென்றறு, அழகுவேறு யான்வேறு எனக்கு அழகு வேண்டுமெனத் தியானிப்பதல்ல, மற்றதும் எந்தவிதமாய் அழகைப்பாவித்தல் அமையும்.

அழகேயான்! அழகெல்லாம் யான்!
யான் அழகெல்லா மாயினேன்!

என்று தியானித்தல்வேண்டும், அவ்வண்ணம் பாவனையுண்டானல் இவனுக்கும் அழகுண்டாகும். ஆண்மை உண்டாவதற்கும் அப்படியே சித்திக்கும்.

ஆரோக்கியத்தை எப்படித் தியானிக்கவேண்டும்? ஆரோக்கியம் வேறு, யான்வேறு, என்னும் எண்ணம் உண்டாக்கக் கூடாது. அவ்வாரோக்கியத்தை முன்னிலைச் சுவர்க்கவெண்ணி நிற்கவும் போகாது.

ஆரோக்கியமேயான்! ஆரோக்கியமெல்லாம்யான்!
யான் ஆரோக்கியமெல்லாமாயினேன்!

என்பதாய் பாவிக்கிலமையும் அவ்வண்ணம் பாவிக்க ஆரோக்கியம் ஒருவனுக்கு வெகு சீக்கிரத்தில் உண்டாகும். இப்படித் தியானஞ் செய்யும்போதெல்லாம் பிராணாயாமம் செய்தல் உசிதமென்பதுணர்க.

சர்வதேவதாவசியம் இரண்டாம்பாகம் முற்றுப்பெற்றது.

42 N59
102183

பதிப்பிடம்:— தெய்வமகள் விலாச அச்சுக்கூடம்
24. தாண்டவராயபிள்ளை வீதி, சென்னை. 18-10-49. 3000 Cp.